# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

| சிலம்பு சஎ | திருவள்ளுவர் ஆண்டு உ00ரு, புரட்டாசி அக்டோபர் 1972 | பரல் உ |
|---|---|---|

## வளருந் தமிழை வளர்ப்பதெப்படி?

*"வடகலையல பலகலையொடு தமிழ்வளருங் கூடல்"*

என்று குமரகுருபரர் தமது மதுரைக் கலம்பகத்தில் அருளி யுள்ளார்.

*"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்*
*தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்*
*இறவாத புகழுடைய புதுநூல்கள்*
*தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"*

என்று பெருங்கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் கூறியுள்ளார்.

குமரகுருபரர் அருளியபடி வடகலைகள் எவை? அவற்ருேடு வழங்கிய பல கலைகள் யாவை என்பன அறிந்தோமா? இல்லையே. பெருங்கவிஞர் பாரதியார் கூறியபடி மேலைநாட்டினர் ஆக்கிய ஆக்கிவருங் கலைகளை யெல்லாம் தமிழில் பெயர்த்து வருகின் ருேமா? புதுப்புதுக் கலை நூல்களைத் தமிழிலே படைக் கின்ருேமா? இல்லையே.

ஆனல் தமிழ் நாட்டுக்குக் கிறித்தவ சமயத்தைப் பரப்ப வந்த மேலைநாட்டு மருத்துவர்கள் நூருண்டுகட்கு முன் தமிழைக் கற்று ஆங்கிலத்திலுள்ள Human Anatomy, Surgery, Hooper's Vade mecum என்ற மூன்று மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து அங்காதிபாதம் (உடற்கூற்று நூல்), இரண வைத்தியம் (அறுவை மருத்துவம்), வைத்தியர் கைவாகடம் என்னும் பெயர்களில் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். அவை

மூன்றையுமே டாக்டர் சாமுவேல் கிறீன், எம்.டி. சரிபார்த்துப் பதித்துள்ளார். அவை மறைமலையடிகள் நூல்நிலையத்தில் 'தமிழில் முடியுமா?' என்று கேட்பவர்கட்கு 'முடியும்' என்று விடையளித்துவருகின்றன.

1779இல் தமிழ் தமிழ் அகராதியையும் 1786இல் ஆங்கிலத் தமிழ் அகராதியையும் முதன்முதல் கொண்டுவந்தவர் கிறித்தவத் தமிழ்த் தொண்டர் ஜான் பெப்ரீசியசு என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்விரண்டும் மறைமலையடிகள் நூல் நிலையத்தைக் காண வருபவர்கட்கு வியப்பும் களிப்பும் ஊட்டுகின்றன.

மேலைநாட்டினர் நூறு ஆண்டுகட்கு முன் வழிகாட்டியுங் கூட நாம் அவ்வழியிற் செல்லாமல் வாளாவிருக்கிறோம்.

குமரகுருபரரும் பாரதியாரும் கூறியதிலிருந்து கலைகளை யெல்லாம் தமிழில் மொழிபெயர்த்தலாலும் ஆக்குவதனாலுமே தமிழில் புதுப்புதுச் சொற்கள் பல்கிப் பெருகும் என்பதும் அதனால் மக்களிடம் கலையுணர்வு வளரும் என்பதும் தெள்ளத் தெளிய விளங்குகின்றனவல்லவா !

## வளருந் தமிழை வளர்ப்பதற்கு நிலையான அமைப்பு

இலக்கண இலக்கியச் சொற்களையே யல்லாமல் பல்கலைச் சொற்களையுங்கொண்ட தமிழ் தமிழ் ஆங்கில வகரவரிசை நூல் ஒன்றை ஆக்குவதற்கும் அதனை மேன்மேலும் வளர்ப்பதற்கும் பலதுறை வல்ல அறிஞர்களைக் கொண்ட நிலையான குழு ஒன்றை அமைத்தல்வேண்டும். அந்தக் குழு பல்கலைக் கழகத்திலேதான் இயங்குதல் வேண்டும். அதற்குத் தமிழகவரசு ஆண்டுதோறும் ஏற்படுத்தும் வரவு செலவு திட்டத்தில் தமிழ் வளர்ச்சிக் கெனப் போதுமான தொகையினை ஒதுக்குதல் வேண்டும். தமிழகவரசில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் காலத்துக் கேற்றவாறு தமிழ் வளர்ச்சிக்குக் கூடுதல் தொகை அளிப்பதற் குரிய நிலையான திட்டம் இருத்தல் வேண்டும்.

சென்னைப் பல்கலைக்கழகம் 1934இல் வெளியிட்ட தமிழ் தமிழ் ஆங்கில அகராதி (Tamil Lexicon) 6 தொகுதிகள், 1939இல் வெளியிட்ட குறைநிரப்புத் தொகுதி (Supplement) ஆகியவற்றைப்பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்பு கின்றேன்.

1905இல் பிரடெரிக் நிக்கல்சன் இங்கிலாந்திலிருந்து டாக்டர் உவின்சுலோ அகராதியையும், டாக்டர் போப்

தொகுத்து வைத்திருந்த சொற்களேயுங் கொண்டு தமிழ் ஆங்கில அகராதியைத் தொகுத்து அச்சிடுவதுபற்றிச் சென்னை மாநில அரசுக்கு எழுதினர். டாக்டர் போப் அவர்கள் 1907இல் இறந்து போகவே பிரடிரிக் நிக்கல்சன் தம்மிடமிருந்த சொற்றெருகுப்பினைச் சென்னைக்கு அனுப்பிவைத்தனர். 1911இல் திருமிகு ஜே. சு. காண்டுலர் ஐந்து ஆண்டுக் கால அளவில் ஒரு நிறைவான தமிழ் அகராதியை வெளியிடுவதற்கு ஒரு நூறுயிர ரூபா வேண்டுமென்று சென்னை அரசுக்குத் தெரிவித்தனர். அதனை அரசு ஏற்று அதன் பதிப்புரிமை அரசுக்கே இருத்தல் வேண்டுமென்றும் அகராதி வேலையைச் சென்னைப் பல்கலைக்கழகத்திடம் ஒப்புவித்து நடத்துமாறும், அதற்குரிய செலவு கணக்கை ஒவ்வொரு ஆண்டு முடிந்ததும் அடுத்த ஆண்டில் அதுவரை நடைபெற்ற வேலையினையும், அதற்கு ஏற்பட்ட செலவு கணக்கையும் பற்றித் தெரிவித்தல் வேண்டுமென்றும் அறிவித்தது. 1915இல் திருமிகு சாண்டுலர் தலைமைப் பதிப்பாசிரியராகவும் பண்டிதர் மூவர் துணையாசிரியர்களாகவும் அமர்த்தப் பெற்றனர். திருமிகு சாண்டுலரைத் தலைவராகவும், இராவ்பகதூர் எம். அரங்காச்சாரியார், பாண்டித்துரைத்தேவர், முதுபெரும்புலவர் வே. சாமிநாதையர், எஸ். குப்புசாமி சாஸ்திரி ஆகியோரை உறுப்பினர்களாகவுங் கொண்ட **அகராதிக்** குழுவும் அமைக்கப்பெற்றது.

1916ஆம் ஆண்டு முடிவில் 80,000 சொற்கள் வரை தொகுக்கப் பெற்றிருந்தன. ரூ. 38,000 வரை செலவுமாயிற்று. இந்தப்படி செய்யும் வேலையினுல் ஒரு நூறுயிர ரூபாவும் 1920க்குள் செலவாகிவிடும் என்று மதிப்பிடப்பெற்றது.

1917இல் அகராதிக் குழுவில் திரு சாண்டுலர் இருந்த இடத்தில் சர் பி. எஸ். சிவசாமி ஐயர் தலைவராகவும், 1919இல் நீதிபதி தி. வி. சேஷகிரி ஐயர் தலைவராகவும், அவருக்குப் பின் 1926இல் இராவ்பகதூர் கே. வி. கிருட்டிணசாமி ஐயர் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். பின் இணைப்பு அகராதி முடியும் வரை திரு ஐயரவர்களே தலைவராக இருந்தார்கள்.

1921இல் திரு சாண்டுலர் அகராதிப் பதிப்பாசிரியர் குழுவின் தலைமைப் பதிப்பாசிரியர் பணியை விட்டு விலகவே திரு. எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை அமர்த்தப் பெற்றார். 1923இல் திரு. பிள்ளை அவர்கள் விலகவே திரு. சி. பி. வேங்கடராம ஐயர் அமர்த்தப் பெற்றார். 1926இல் திரு ஐயர் தமது கல்வித்துறைப் பணிக்கு மீண்டும் செல்லவே இடையில் இரண்டு திங்கள் மட்டும் திரு. பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி

யும் அதன்பின் திரு ச. வையாபுரிப் பிள்ளையவர்களும் அமர்த்தப் பெற்றுத் திரு. பிள்ளையவர்கள் பின் இணைப்பு அகராதி முடியும் வரை தலைமைப் பதிப்பாசிரியராகவே இருந்தார்கள். இணைப்புத் தொகுதிப் பதிப்பாசிரியர் குழுவில்மட்டும் திரு. ரா. பி. சேதுப் பிள்ளையும் புலவர் வேங்கடராசலு ரெட்டியாரும் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அகராதி 6 தொகுதிகளிலுமுள்ள மொத்தச் சொற்கள் 1,04,405 ஆகும். டாக்டர் உவின்சுலோ அகராதியில் 67,542 சொற்களே உள்ளன. 6 தொகுதிகட்கும் மொத்தம் செலவான தொகை ரூ. 4,10,000. அதில் ரூ. 1,00,000 மட்டும் சென்னை மாநில அரசு கொடுத்தது. எஞ்சிய தொகையினைச் சென்னைப் பல்கலைக்கழகமே ஏற்றுக் கொண்டது. அகராதியின் உரிமை முழுதும் பல்கலைக் கழகத்துக்கே உரியதாயிற்று.

இவ்வகராதியில் தொடக்க முதல் தமிழரல்லாதவர்களும் தமிழ்ப் பற்றில்லாதவர்களும், அவர்கள் சார்பில் இருந்த தமிழ்ப் புலவர்களுமே அகராதிக் குழுவிலும், பதிப்பாசிரியர் குழுவிலும் இருந்தமையால் ஏராளமான தூய தமிழ்ச் சொற்கள் விடப் பட்டுள்ளன. சொற்கட்குத் தூய தமிழ்ப் பொருள்கள் கொடுக்கப் பெறவுமில்லை. பெரும்பான்மையான சொற்கள் வடமொழிச் சார்பாகவே தொகுக்கப் பெற்றுள்ளன.

'தமிழர்', 'தமிழன்' என்ற சொற்கட்கு நேர்மையான விளக்கம் தரப்படவில்லை என்பதை அடியிற் குறிப்பிடுகின்றேன்.

பல்கலைக்கழகத் தமிழகராதியில் **'தமிழர்'** என்ற தமிழ்ச் சொல்லுக்கு "Tumbler, Drinking Cup. **தீர்த்த பாத்திரம்**" என்று பொருள் கொடுக்கப் பெற்றிருக்கிறது என்பதை 20—9—72இல் குழந்தைக் கலைக்களஞ்சியம் 5 ஆவது தொகுதி வெளியீட்டு விழாவிலே மாண்புமிகு நலத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் எடுத்துக்கூறி வருத்தம் தெரிவித்தனர். இன்றுவரை அது திருத்தப்படவில்லை.

அதுவேயன்றித் **'தமிழன்'**, என்ற சொல்லுக்குக் கொடுக்கப் பெற்ற பொருளும் விந்தையாகவே இருக்கின்றது. "தமிழன் 1. One whose mother-tongue is Tamil; தமிழைத் தாய் மொழியாக உடையவன். 2. A Tamilian, as *dist. fr. ariyan*, ஆரியனல்லாத தென்னாட்டான். ஆரியன் கண்டாய். தமிழன் கண்டாய் (தேவாரம் 744, 5). 3. Caste man, as *dist. fr. paraiyan*, பறையனொழிந்த தமிழ்ச் சாதியான் Madr."

மறைத்திரு மறைமலையடிகளாரால் பெரிதும் பாராட்டப் பெற்ற மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் **பாவாணர்** அகராதிப் பதிப்பிலுள்ள பல குறைபாடுகளை எடுத்து **விளக்கி** ஒரு நூல் வெளியிட்டுள்ளார்கள். எனவே பல்கலைக்கழகத் தமிழகராதிப் பதிப்பு மிகவும் குறைபாடுடையதென்பதும் திருத்தமான விரிவான பதிப்பொன்று வெளிவர வேண்டுமென் பதும் மிகவும் இன்றியமையாமையாகும்.

இங்கே அமெரிக்கா நியூயார்க்கில் 1967ல் **ராண்டம் அவுசு** (Randum House) **நிறுவனத்தார்** ஆங்கில மொழிக்கு வெளியிட்டுள்ள R H. D. என்னும் அகராதியைப் பற்றித் தெரிவிப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அதன் முகவுரையில் அறிவியல், தொழில் நுணுக்கம், மருத்துவம், கலைகள் முதலிய பல வேறு துறைகள் அண்மையில் சில ஆண்டுகளில் பெரிதும் வளர்ச்சியுற்றிருப் பதால் இக்காலத்தில் பள்ளி கல்லூரிகளில் கல்வி பயில் வார்க்கும் அலுவலகங்கள் தொழிலகங்கள் முதலியவற்றில் பணிபுரிவோர்க்கும் பயன்படும் வகையில் பல துறைகளில் வல்ல 350 அறிஞர்களின் உதவி கொண்டு தொகுக்கப் பெற்ற தனிப் பெருஞ் சிறப்பும் நம்பிக்கையும் ஊட்டக்கூடிய ஆங்கில மொழி அகராதி ஆகுமாம். மேலும் ஆர். எச் .நிறுவனத்தார் கேள்வித் தாள் (Questionnaire) அச்சிட்டு வெளிநாடுகளிலுள்ள அறிஞர் கட்கும் வேறு தொழில் நிறுவனங்கட்கும், துறைகட்கும் அனுப்பிச் சொற்களையும் கருத்துக்களையும் தொகுத்துள்ள னராம். அதன் அளவு 30×24 செ. மீ. அதன் எடை 4·75 கிலோ ஆகும். 3 பத்திகளில் 1644 பக்கங்களில் A முதல் Z முடியவுள்ள சொற்கள் விளக்கப்படங்களுடன் அமைக்கப் பெற் றிருக்கின்றன. மேலும் 32 பக்கங்களில் குறிகளும் அடையாளங் களும், உலகிலுள்ள பல்கலைக்கழகங்களின் பெயர்கள், அமெரிக் காவிலுள்ள கல்லூரிகளின் பெயர்கள், 198 பக்கங்களில் ஆங்கிலம் - பிரஞ்சு, பிரஞ்சு - ஆங்கிலம், ஸ்பேனிசு - ஆங்கிலம், ஆங்கிலம் - ஸ்பேனிசு, இத்தாலியம் - ஆங்கிலம், ஆங்கிலம் - இத்தாலியம், செர்மன் - ஆங்கிலம், ஆங்கிலம் - செர்மன் ஆகிய எண் வகையான சுருக்க அகராதிகளும், 8 பக்கங்களில் பார்வை நூல்களின் (Reference books) பெயர்களும், 20 பக்கங்களில் உலக வரலாற்றின் முக்கியமானவற்றிற்குத் தேதிகளும், 26 பக்கங்களில் உலகிலுள்ள பெரிய நீர்வீழ்ச்சிகள், பெரிய ஆறுகள், எரிமலைகள், மலைகள் ஆகியவற்றின் பெயர்களும், உலக விளக்கப்பட(Atlas)மும் அச்சிடப் பெற்றிருக்கின்றன. அழுத்தமான உயர்ந்த துணிக் கட்டடஞ் செய்யப்பெற்றுக் கவர்ச்சியான திண்ணிய மேலுறையுடையது. அதன் **விலை**

ரூ. 187-50 ஆகும். அதனைத் தவணை முறைப் பெருவணிகர் திரு வி. ஜி. பன்னீர்தாசு அவர்கள் அலுவலகத்திற் கண்டு பெருமகிழ்ச்சியுற்று இதைப்போலத் தமிழுக்கு ஓரகராதி வெளி வர வேண்டாமாவெனக் கருதினேன். சென்னையிலுள்ள வெளிநாட்டுப் பொத்தக வணிகர் ஒருவரிடமிருந்து அந்நூல் விலைக்குக் கிடைக்கப்பெற்று மறைமலையடிகள் நூல்நிலையத்தில் இடம் பெற்றுள்ளது. இது குறைந்தது 50,000 படிகளாவது அச்சிடப்பெற்றிருத்தல் வேண்டுமென்று கருதுகின்றேன்.

மேலட்டையின் உட்பக்கத்தில் '**இந்தோ ஐரோப்பிய மொழிகள்**' என்னுந் தலைப்பில் ஓர் அட்டவணை காணப்படு கிறது. அதன்கண் திராவிட மொழிகளைப் பற்றியோ அவற்றில் மூத்த மொழியான மிகச் சிறப்புள்ள பண்டுதொட்டு இன்று காறும் இளமை குன்ருது நின்று நிலவும் தமிழ் மொழியைப் பற்றியோ குறிப்பொன்றும் இல்லாதது வருந்துதற்குரிய பெருங் குறையாகும். இதற்குத் தமிழ் அறிஞர்கள் அதைப் பற்றிக் கருதாதிருப்பதே காரணமாகும். இந்தோ ஐரோப்பிய மொழி அட்டவணையில் 'இந்தோ ஈரானியன்' என்ற பகுதியிலுள்ள **இண்டிக்** என்ற தலைப்பில் சமஸ்கிருதம், பிராகிருதம், பாலி, குசராத்தி, மராத்தி, இந்துஸ்தானி, இந்தி, உருது, வங்காளி, பிகாரி, சிந்தி, பிகிலி, இராசஸ்தானி, பஞ்சாபி, பகாரி முதலிய மொழிகளின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. திராவிட மொழிகளைப் பற்றிய குறிப்பு மட்டுமில்லை.

**திருத்தமான விரிவான தமிழ் அகராதி தொகுத்து அச்சிடுவதற்குச் செய்யவேண்டுவன.**

ஒரு நிலையான பதிப்பாசிரியர் குழுவும், அதற்கொரு மேற் பார்வைக் குழுவும் அமர்த்தப்பெறுதல் வேண்டும். அகராதிப் பதிப்புக் குழு பணி செய்வதற்குரிய தகுந்த இடம் பல்கலைக் கழகத்திலே ஒதுக்கப் பெறுதல் வேண்டும். அந்த இடமும் நூல் நிலையத்தை ஒட்டியதாகவே இருத்தல் வேண்டும். முதற் கண் முன் வெளியிடப் பெற்ற தமிழ் அகராதி 6 தொகுதிகளை யும் பட அச்சு (offset) முறையில் இரண்டாயிரம் படிகள் அச்சிட்டு வெளியிடுதல் வேண்டும். அவற்றிலும் இணைப்பு அகராதி யிலும் இல்லாத சொற்களையெல்லாந் தொகுத்து இணைப்பு அகராதியிலுள்ள சொற்களோடு சேர்த்து அகரவரிசைப்படுத்தி ஓர் இணைப்பு அகராதியினை வெளியிடுதல் வேண்டும். இதனைச் செய்வதால் இப்போது அகராதி கிடைக்கப் பெறவில்லை என்ற பெருங்குறை நீங்கும்.

**இனி இரண்டாவது பதிப்பாகக் கொண்டு வருவதற்குச் செய்ய வேண்டிய செயல்முறைகளைப் பற்றிக் கவனிப்போம்.**

புதிய அகராதிகளைக் கொண்டு வருவது பற்றிச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும் தமிழ்ப் பேராசிரியரும், என் பெருமதிப்புக்குரியவருமாகிய டாக்டர் ந. சஞ்சீவி, (எம்.ஏ., எம்.லிட்., பிஎச், டி.) அவர்கள் தம் கருத்துக்களைக் கட்டுரை வடிவில் எழுதி 28—9—1970இல் இந்திய மொழிகளில் அகராதி ஆக்கம் பற்றி மைசூரில் நடைபெற்ற முதல் மாநாட்டில் படித்துள்ளார். அக்கட்டுரை சிறு ஏடாக அச்சிடப் பெற்று வெளிவந்துள்ளது. அதன்கண்ணுள்ள சீரிய கருத்துக்கள் யாவும் அப்படியே ஏற்றுக்கொள்ளற்பாலன.

**எனது பட்டறிவிற் கண்ட கருத்துக்களை அடியிலே விவரிக்கின்றேன்:**

பழங்காலந் தொட்டுத் தமிழில் வழங்கிவந்த ஒருபொருட் பல சொற்களிற் சில தமிழினின்றும் 'பிரிந்து போன தெலுங்கில், கன்னடத்தில், மலையாளத்தில், துளுவில் வழக்காற்றிலும் தமிழில் வழக்கில் இல்லாமலும் இருக்கின்றன. இருமொழிப் புலமை யுடையவர்களை அம் மொழிகள் பேசும் நிலங்கட்கு அனுப்பி அவற்றை தொகுத்துவரச் செய்தல் வேண்டும். பண்டைத் தமிழ் மக்கள் வடநாடுவரை பரவி இருந்தார்களென்று வரலாறு கூறுவதால் வடநாட்டு மொழிகளில் விரவி உருமாறிக் கிடக்கும் தமிழ்ச் சொற்களைக் கண்டுபிடித்து எடுத்தல்வேண்டும்.

மத்தியதரைக் கடலோரத்திலுள்ள நாடுகளில் பேசப்படும் மொழிகளில் நம் தமிழ்ச்சொற்கள் பல இருக்கின்றனவென்று விபுலானந்த அடிகள் 1936ஆம் ஆண்டில் சென்னை பவழக்காரத் தெரு, ஏ. ஆர். சி. பள்ளியில் ஒருமுறை பேசியதைக் கேட்டு வியப்புற்றேன். அப் பேச்சு நாடாப் பதிவுப் பொறியில் படி எடுக்கவுமில்லை. கட்டுரை வடிவிலோ நூல் வடிவிலோ அச்சிடப் பெறவுமில்லை. அது மிகவும் வருந்துதற்குரியது.

சர் ஜான் மார்சல்சும், ஈராசு பாதிரியாரும் சிந்துவெளி நாகரிகம் திராவிடர் நாகரிக மென்று அறுதியிட்டு ஆராய்ந்து தெரிவித்ததையும் அண்மையில் கம்பியூட்டர் (கணிதப் பொறி) உதவி கொண்டு பின்லாந்து அறிஞர்களும் ருஷிய அறிஞர்களும் திராவிடர் நாகரிகமே என்று ஒப்புக்கொண்டு எழுதி வருவதையும் நாம் தமிழ் நாட்டில் இருந்து கொண்டே மதிப்பிடுகின்றோம்.

நம்மவர்களில் மொழித்துறை வல்லுநர்கட்கு வரிவடிவம், கல் வெட்டுத் துறை, நிலநூல், உயிர் வளர்ச்சி முதலிய துறைகளில் பயிற்சி யளித்து அவர்களைச் சிந்துவெளிப் பகுதிக்கனுப்பி ஆராய்ந்துவரச் செய்தால் உண்மை தெள்ளிதல் விளங்கி வரலாற்று முடிவு உறுதிபெறும்.

நம் தமிழகத்திலும் வெளிமாநிலங்களிலும் உள்ள கல் வெட்டுக்களை யெல்லாம் ஆராய்ந்து தமிழ்ச் சொற்களைத் திரட்டுதல் வேண்டும். ஓவியக்கலை, சிற்பக்கலை, கட்டிடக்கலை, மருத்துவக்கலை, சோதிடக்கலை, வானநூற்கலை, இசைக்கலை, நாடகக்கலை, நாட்டியக்கலை, கப்பற்கலை போன்ற பலதுறைக் கலைகளிற் காணப்படும் சொற்களை யெல்லாம் ஆய்ந்து எடுப்பதற்குரிய ஏற்பாட்டினைச் செய்தல் வேண்டும். வணிகம், பயிர்த்தொழில், தோட்டம், காடு, மலை, ஆறு, கடல் ஆகிய வற்றைச் சார்ந்து வழங்கப் பெறும் சொற்களை யெல்லாம் தொகுத்தல் வேண்டும். சிற்றூர்களிலும், சேரிகளிலும், பல்வேறுவகை கைவினைஞர்களிடத்திலும் வழங்கப்பெறும் சொற்களை யெல்லாம் திரட்டுதல் வேண்டும். எடுத்துக் காட்டாக இங்கே ஒன்று அறிதற்பாலது. பொற் கொல்லரின் பட்டறையில் ஒரு பெட்டியில் பல அரங்கள் இருப்பதையும் அவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப் பெயர் இருப்பதையும் அவர் தம் கையாளிடம் பெயர் சொல்லித் தமக்கு வேண்டிய அரத்தை எடுத்துவரச் சொல்வதையும் பார்க்கும்போது இப்படி ஒவ்வொரு கைவினைஞரிடமும் எத்தனையோ சொற்கள் புழக்கத்திலிருக் கின்றன வென்று தெரியவரும். எனவே பல்வேறு தொழில் பட்டறைகட்குச் சென்று அவ்விடங்களில் (அவ்வத் துறைகளில்) வழங்கப் பெறுகிற சொற்களை யெல்லாந் தொகுத்தல் வேண்டும்.

பல்கலைக்கழக அகராதி ஆறு தொகுதிகளிலுள்ள சொற் களைத் தொகுத்தற்கு எடுத்து ஆளப்பெற்ற நூல்கள் 530, இணைப்புத் தொகுதிக்குப் புதிதாக ஆளப் பெற்ற நூல்கள் 114, முன்னமே அச்சிடப் பெற்ற பல நூல்கள் விடுபட்டிருக்கின்றன. 1939இல் இணைப்பு அகராதி வெளிவந்தபின் புதிய நூல்கள் பல வெளிவந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் இரண்டாம் பதிப்புக்குப் பயன்படுத்துதல் வேண்டும்.

மேலும் முன்னமே நடைபெற்று நின்றுபோன இதழ்கள் (Journals), நடந்துகொண்டிருக்கும் செந்தமிழ்ச் செல்வி, கலைக் கதிர் போன்ற இதழ்கள், திணை ஏடுகள் (Gazeteers) ஆகிய வற்றிலிருந்து சொற்களைத் தெரிந்தெடுத்தல் வேண்டும்.

மறைத்திரு மறைமலையடிகள் தாம் எழுதிய நூல்களில் எத்தனையோ புதிய சொற்களை ஆக்கிப் பயன்படுத்தியுள்ளனர். பல்கலைக்கழக அகராதியில் அடிகள் பெயரும் நூல்களும் இடம் பெறவில்லை என்பதும், அங்ஙனமே அடிகளாரின் ஆசிரியர் சைவசித்தாந்த கண்டமாருதம் சோமசுந்தர நாயகரவர்களின் பெயரும் நூல்களும், அவர்கள் உடன் பேராசியராகவிருந்த வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் (பரிதிமாற் கலைஞர்) பெயரும் நூல்களும் இடம்பெறவில்லை என்பதும் அறிதற் பாலன.

பல்கலைக் கழகத் தமிழகராதியினை அச்சிடுங் காலத்தில் அதன் அமைப்பினைக் கண்டு பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, பேராசிரியர் மு. சி. பூரணலிங்கம் பிள்ளை, மறைத்திரு மறைமலையடிகள், தமிழ்ப் பேரறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர், தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை முதலியோர் வருந்தினார்கள் என்பதை யான் நன்கு அறிவேன்.

இந்த அகராதிக் குழுவினரின் தமிழுக்கு மாறான போக்கினை உணர்ந்த காரணத்தால் அக்குழுவில் இவர்கள் இடம்பெற மறுத்துவிட்டனர்.

எனவே, இங்ஙனம் சொற்களையெல்லாம் தொகுத்து அவை எப்படித் தோன்றின என்பதற்கு 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்ற முதுமொழியை உரைகல்லாகக் கொண்டு பொருள் காணுதல் வேண்டும்.

இப்படி நம் தமிழகராதி திருத்தத்துடன் பெருகி வெளி வருவதற்கு **மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர்** அவர்களிடம் தகுந்த கருத்துக்களைப் பெறுதல் முதன்மையாகும். அவர்கள் ஆக்கி யச்சிடப்போகும் **வேர்ச்சொல் அகராதிக்கு** வேண்டும் பொருளுதவி வழங்குதலும் வேண்டும்.

மொழித் துறையில் இயல்பாகவே திறமையோடு பயின்று வரும் மாணவர்களில் இருவர் அல்லது மூவரைத் தேர்ந்தெடுத்துத் திருப் பாவாணரவர்களிடம் அனுப்பிப் பயிற்சி பெறுவதற்குத் தமிழகவரசு பொருளுதவி செய்யின் பெரும் பயன் கிடைக்கும்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு அரசோ, மடங்களோ, செல்வர்களோ இதுகாறும் ஒன்றுஞ் செய்யவில்லையே என்ற வருத்தத்தால் திருப் பாவாணர் அவர்களைப் போன்ற பேரறிஞர் சிலர் கண்டிப்பதைப் பொறுமையாக ஏற்றுக் கொள்வது மொழி வளர்ச்சிக்கு நன்மை செய்வதாக அமையும்.

இப்படித் தமிழகராதியைத் தொகுப்பதற்கு நிலையான பதிப்புக் குழுவினை நம் பல்கலைக் கழகத்திலேயே நிறுவி அதற்குத் தக்க மொழிப்பேரறிஞர் ஒருவரைத் தலைமைப் பதிப்பாசிரியராகவும், பலதுறை அறிஞர்களை உதவி யாசிரியர்களாகவும் அமர்த்துதல் வேண்டும்.

இங்கே **மகாராட்டிர அரசு இலக்கியப் பண்பாட்டுக் கழகம்** அண்மையில் இருமொழி அகராதிகளை வெளியிட்டு வருதலைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். மராட்டிய மக்கள் பிற இந்திய மொழிகளைப் பயிலும் பொருட்டும், பிற மொழியாளர் மராத்திய மொழியைப் பயிலும் பொருட்டும் இரு மொழி அகராதிகளைப் பதித்து வருகின்றது. குசராத்தி—மராத்தி, உருது—மராத்தி, கன்னடம்—மராத்தி ஆகிய மூன்று அகராதிகளைப் பதித்து வெளியிட்டுள்ளது. இவ்வாண்டில் தமிழ்—மராத்தி, மராத்தி—மலையாளம், மராத்தி—ருசியன் ஆகிய மூன்று அகராதிகள் அச்சிடப் பெறுமாம். அடுத்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் வங்காளி—மராத்தி, மராத்தி—வங்காளி, மராத்தி—குசராத்தி, மராத்தி—உருது, மராத்தி—தமிழ், ருசியன்—மராத்தி ஆகிய ஆறு அகராதிகளை வெளியிடத் திட்டமிட்டுள்ளது. இம்முறையில் தமிழகவரசும் இருமொழி அகராதிகளை வெளியிடவேண்டுவது இன்றியமையாத பணியாகும்.

1965 இல் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட **ஆங்கிலத் தமிழ் அகராதி**யைப் பற்றியும் இங்கே கூறுவது பொருத்தமாகும்.

1955 இல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழு தீர்மானித்தபடி ஆங்கிலத் தமிழ் அகராதிப் பதிப்புக்கு டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியாரவர்களைத் தலைமைப் பதிப்பாசிரியராகவும் அறிஞர் எழுவரை உதவி யாசிரியர்களாகவும் கொண்ட குழு ஒன்று அமைக்கப் பெற்றது. அக்குழு 16-3-1959 முதல் பணி செய்யத் தொடங்கி 6 ஆண்டுக் காலத்தில் அகராதியை இரண்டு பகுதிகளாக வெளியிட்டது. 3-7-1965 இல் அக் குழு தன் வேலையைச் செய்து முடித்தபின் கலைக்கப்பட்டது. ஆனால் அதுவும் நிலையான குழுவாக இருந்து அடுத்த பதிப்புக்குப் பணிசெய்து வரின் நன்றாயிருக்கும். அக்குழுவோடு **கலைச் சொல்லாக்கப் பணி**யையும் இணைத்துச் செயலாற்றச் செய்வதும் அதற்கும் தமிழகவரசு ஆண்டுதோறும் வரவு செலவு திட்டத்தில் தக்க தொகையினை ஒதுக்கி வைப்பதும் இறையமையாத செயலாகும்.

**கலைக்களஞ்சியம்**

திருவாளர் தி. சு. அவிநாசிலிங்கஞ் செட்டியாரவர்கள் செய்த பெருமுயற்சியினால் தமிழில் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளில் முதல் தொகுதி 1954 இலும் கடைசித் தொகுதி 1968 இலும் வெளியிடப் பெற்றன. அவற்றில் முதல் ஐந்து தொகுதிகள் இப்போது கிடைக்கப் பெறவில்லை. எஞ்சிய தொகுதிகளும் விரைவிலே விற்றுத் தீர்ந்துபோகும். முதல் பதிப்பில் பயிற்சி பெற்றவர்களை அப்படியே வைத்து இரண்டாவது பதிப்பினைக் கொண்டு வருதற்கு ஏற்பாடு செய்திருப்பின் இரண்டாவது பதிப்பு விரைவிலே வெளிவருவதற்குரிய நிலை ஏற்பட்டிருக்கும். இப்போதாவது அதற்கு நிலையான பதிப்புக் குழுவினை நிறுவி முதற் பதிப்பில் செய்ய வேண்டிய திருத்தங்களைச் செய்யவும், புதிய சொற்களைத் தொகுத்து விளக்கம் எழுதவும் ஏற்பாடு செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

இங்கிலாந்தில் ஆக்சுபோர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்கள் ஆங்கில அகராதியை வெளியிட்டு வருதலையும், அவை ஆண்டுக் காண்டு பதிப்புக்குப் பதிப்பு விரிவடைந்து வருதலையுங் காண்கிறோம். அந்நூல்கள் பெருவாரி விற்பதற்கு வாய்ப்பு இருப்பது உண்மை. நமது மொழிக்கு ஆண்டுதோறும் சில நூறாயிரம் ரூபா செலவழிப்பதும் அத்துறையில் பலர் பயிற்சி பெறுதற்கு வாய்ப்பு ஏற்படுத்துவதும் தமிழகவரசுக்கு இயலாத தொன்றில்லை. ஒவ்வொரு துறையிலும் பயிற்சி பெறுபவர் வாழையடி வாழையாக வந்து கொண்டிருத்தல் வேண்டு மென்பது அறிவுடையார் எவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய உண்மையாகும்.

நம் தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்கட்கும் தமிழ் தமிழ் ஆங்கில அகராதி, ஆங்கிலத் தமிழகராதி, கலைச்சொல் அகராதி, கலைக் களஞ்சியம், தமிழ்நாட்டு வரலாறு ஆகியவற்றைப் பிரித்துக் கொடுத்து அவை ஒவ்வொன்றுக்கும் நிலையான பதிப்புக் குழுவினையும் அமைத்து அவையெல்லாம் சரியானபடி நடைபெறுவதற்கு ஆண்டுதோறும் போதுமான பொருளுதவியுந் தமிழகவரசு செய்தல் வேண்டு மென்பது தமியேனது விருப்பம்.

கல்விக்கு 100 கோடிகள் செலவழிப்பதாகக் கூறுந் தமிழக வரசு தமிழ்மொழி வளர்ச்சிக்கு மேலே கூறியவாறு செய்ய வேண்டிய பணிகட்கு ஒருகோடி ஒதுக்கினால் நமது மொழி சொல்வளம் பொருள்வளம் பெற்று நம் தமிழகம் உலகஅரங்கில் அறிவுப் பேரொளியாய் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

—வ. சுப்பையா.

# சிலப்பதிகார ஆராய்ச்சி

## [புலவர் இரா. இளங்குமரன்]

### 1. 'கிழவர் இளங்கோ'

இளங்கோவடிகள் தமிழ்க் காப்பியங்களின் தந்தை ஆவர். முதற் காப்பியமாகச் சிலப்பதிகாரத்தை இயற்றினாலும் பின்வந்த காப்பிய நூல்களுக்கு இலக்கணமாக அமையும் சிறப்புப் பெற இயற்றினார். இளங்கோவடிகள் கொண்டிருந்த புலமையையும், பட்டறிவு முதிர்வையும் அவர்தம் சிலம்பு செவ்வனே தெரிவிப்பதாக இருக்கின்றது. மேலும், தமிழர் எழுத மறந்ததான 'தன்வரலாறு' இளங்கோவடிகளாலேதான் முதற்கண் எழுதப்படுகின்றது. ஆதலின், "தன் வரலாற்றின் தந்தை" என்றும் இளங்கோவடிகளைக் குறிப்பிடலாம். இவ் விளங்கோவடிகள் சிலம்பு எந்த அகவையில் எழுதத் தொடங் கினார் என்பது குறித்து இக்கட்டுரையில் ஆராய்வோம்.

இளங்கோ என்றவுடன் நம் மனக்கண்முன் இளமைதான் வந்து நிற்கின்றது. அவ்விளமைக் கோலந்தான் இளங்கோ வடிகள் நூல் யாக்கப் புகுந்த கோலமா எனின் காண்போம். இமயத்தை எல்லையாகக் கொண்டு ஆண்ட நெடுஞ்சேரலாதன் பெற்றெடுத்த மக்கள் இருவர். அவருள் மூத்தவன் செங் குட்டுவன்; இளையவர் இளங்கோ! ஒருநாள் மக்கள் இருவரும் பக்கத்தே இருக்க, சேரலாதன் அரியணையிலே அமர்ந்திருந்தான். அதுகாலையில் நிமித்தம் வல்லான் ஒருவன் அவ்விடத்தை அடைந்தான். அவன் இளங்கோவைக் கூர்ந்து நோக்கி "இவ்விளையவனே அரசாளும் இலக்கணம் அனைத்தும் அமையப் பெற்றுள்ளான்; ஆதலால் இவனே அரசனாவதற்கு உரியன்" என்றான். இச் சொல்லைக் கேட்ட இளங்கோவின் முகம் மாற்றம் உற்றது. நிமித்திகனை வெகுண்டு நோக்கி "மூத்தவன் இருக்க இளையவனே ஆளவேண்டும் என்று முறை கெடக் கூறினை; உன் கூற்றைப் பொய்யாக்குமாறு இப்பொழுதே துறவு கொள்கின்றேன்" என்று துணிந்தார். அப்படியே நடத்திக் காட்டினார்.

இளங்கோ துறவு கொள்ளும் நேரத்தே செங்குட்டுவன் ஆட்சி ஏற்கத் தக்க ஆண்டினனாக இருந்தான். அவனுக்கு நேர் இளையவர் இளங்கோ! செங்குட்டுவனுக்கு நேர்ந்த துயரத்தைக் குறிப்பால் அறியும் திறம் இளங்கோவடிகளுக்கு

இருந்தது. அத்துயரை மாற்றியமைக்கத் தக்க எண்ணம் நொடிப் பொழுதில் தோன்றியது. இவற்றை நோக்குங்கால் செங்குட்டுவனுக்கு அகவை பதினாறும், இளங்கோவுக்கு அகவை பன்னிரண்டும் ஆகவாவது இருந்திருக்கக்கூடும் என்ற முடிவுக்கு வரலாம்.

இஃது ஒருபுறம் இருக்க, பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தைப் பாடிய புலவர் பரணர் ஆவர். அவர் பொய்யா நாவிற் பரணர் என்று கொண்டாடப்பெறும் புகழாளர். அவர் செங் குட்டுவனது வரலாற்றைப் பதிற்றுப்பத்தில் குறிப்பிடுகின்றார். சேரன் மேல்கடலிடைக் கொண்ட வெற்றியும், மோகூர் மன்னன் முரசங் கொண்ட வெற்றியும் அவரால் குறிக்கப் பெறுகின்றன. வடநாடு சென்று பத்தினிக்குக் கல் கொண்டு வந்த வரலாறு அவரால் குறிக்கப் பெறவில்லை. அன்றியும் பிற்கால வாழ்வில் செங்குட்டுவன் கொண்ட வெற்றிகளும் குறிக்கப் பெறவில்லை. பரணர் பாடிய பாடல்கள் பதிற்றுப் பத்தினை அன்றி வேறுசில தொகை நூல்களிலும் உள. அங்கெல்லாம் பெரும் வரலாறுகளைச் சுட்டிச் செல்லும் அவர், செங்குட்டுவன் பிற்பகுதி வரலாற்று நிகழ்ச்சிகள் நடந்தபோது இருந்திருப்பாராயின் அவற்றைக் கூறாது விட்டுச் சென்றிருக்க மாட்டார். ஆதலால் பரணர் செங்குட்டுவனது முற்பகுதி வரலாற்றையே தாம் பாடிய பாடல்களில் குறித்தவர் ஆகின்றார்.

இளங்கோவடிகள் தம் நூலில் ஒரு காண்டத்தைச் சேரனுக்கு உரித்தாக்குகின்றார். அங்கே தான் செங்குட்டுவன் வடநாடு சென்று கற்புத் தெய்வத்திற்குக் கல் கொணர்ந்த வரலாறு கூறப்படுகின்றது. இளங்கோவடிகளோ ஆய்ந்து தெளிந்து அளவொடு கூறுபவர். ஆகலின் தம் நூலுக்கு ஏற்ப வடவர் போரையும், அதன் வெற்றியையும் கல்லெடுப்பையும் விரியக் கூறினர். எஞ்சிய போர்களைச் சுருக்கிக் காட்டினர். இதனல் செங்குட்டுவன் வரலாற்றின் முற்பகுதி பரணராலும், பிற்பகுதி இளங்கோவடிகளாலும் குறிக்கப் பெற்றது எனலாம். இஃது இவ்வாறாக, ஒவ்வொரு பத்திற்கும் பதிகம் என ஒன்று பதிற்றுப்பத்தைத் தொகுத்தோரால் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளது. அதனை எழுதியவர், வரலாறும் கால உணர்வும் தெளிய அறிந்தவர் என்பதை அவர் குறிப்புக்கள் அறியச் செய் கின்றன. பதிற்றுப்பத்துக் கூறும் சேர அரசர்கள் அத்தனை பேரின் ஆட்சியும் முடிந்த பின்னர் அவர் தக்க சான்றுகளைக் கொண்டு முறைபெறப் பதிகம் பாடியிருக்க வேண்டும். இவ்வாறு பாடப் பெற்ற பதிகங்களில் ஒன்றே ஐந்தாம் பத்துப்

பதிகமாகும். அப்பதிகம் செங்குட்டுவன் நடத்தியதாகப் பரணர் கூறும் போர்களையும், அதற்குமேல் அவன் நடத்திய போர்களையும், இளங்கோவடிகள் குறிப்பிடும் வடநாட்டுப் போரையும் சேர்த்துத் தொகுத்துக் குறிப்பிடுகின்றது. அதில்,

''கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவிற் கானம் கணையிற் போகி
ஆரிய வண்ணலை வீட்டிப் பேரிசை
இன்ப அருவிக் கங்கை மண்ணி''

என்னும் பகுதி குறிப்பிடத்தக்கதாம்.

மற்றும், நமக்குத் துணையாகும் நல்லதொரு குறிப்பையும் அப்பதிகம் தருகின்றது. ''கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் ஐம்பத்தையாண்டு வீற்றிருந்தான்'' என்பதே அது. வாழ்ந்தது ஐம்பத்தையாண்டு அல்ல. அவன் வீற்றிருந்தது-அரியணையில் வீற்றிருந்தது - ஐம்பத்தையாண்டு! இந்த ஆண்டினை வாழ்வு யாண்டு எனக் கருதக் கூடாதோ எனின். பதிற்றுப்பத்தின் வேறு சில பதிகங்களில் ''பதினாறுண்டு வீற்றிருந்தான்,'' ''பதினேழியாண்டு வீற்றிருந்தான்'' என்று வருவனவற்றால் ஒவ்வாமை அறிக. அன்றியும் கல்லெழுத்துக்களிலே காணப் பெறும் காவலர் ஆண்டுகள் ஆட்சியாண்டாக இருக்கும் உண்மையும் தெளிக. வாழ்ந்ததை வீற்றிருத்தல் என்னும் வழக்கின்மையும் காண்க!

இங்குக் கூறியவற்றால் செங்குட்டுவன் ஐம்பத்தை யாண்டுகள் ஆட்சி செய்ததாகக் கொள்ள வேண்டுவது உண்மையாவதாலும், அவன் பதினாறும் யாண்டிலே ஆட்சிப் பொறுப்பேற்று இருக்கக் கூடும் எனக் கருதுவதாலும் எப்படியும் செங்குட்டுவன் எழுபது யாண்டுகட்குக் குறைவு படாமல் வாழ்ந்திருந்தான் என்பது தெளிவாம். மேலும் அவன் பிற்பகுதி வாழ்விலே நிகழ்ந்ததுதான் வடநாட்டுக் கற்கோள் செலவு என்பதை ஒருவழியால் ஆராய்வோம்.

சேரனது முற்பகுதி நிகழ்ச்சியாயின் மிக உயர்ந்ததான இச்செயலைப் பரணர் கூறாது விட்டுச் சென்றிருக்க மாட்டார் என்பது உறுதி. இது நிற்க; வடநாடு சென்று கண்ணகிக்குக் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டி வஞ்சிமாநகர் வந்து சேர்ந்த செங்குட்டுவன் ஆடல் பாடல்களில் மகிழ்ந்து அரியணையில் அமர்ந்திருந்தான். அதுபோழ்து நீலன் என்னும் ஒற்றர் தலைவன் வந்தான். நீலனே, தமிழர் தம் ஆற்றலை இகழ்ந்த கனகவிசயரைச் சேரன் ஆணைப்படி பாண்டிய, சோழ

வேந்தர்க்குக் காட்டிவரச் சென்றவன். அவன், பார்த்திபர் இருவரும் "தோற்றோடியவரைச் சிறை செய்து வந்த வெற்றி போலொரு வெற்றி கண்டிலேம்" என்று கூறிய இம்மொழியை கொண்டுவந்து சேரனிடம் சேர்த்தான். அதனால் செங் குட்டுவன் சீற்றமுற்றுச் சோழ பாண்டியர்களுடன் போரிட எழுந்தான். அதுபோழ்து அருகில் இருந்த மாடலன் என்னும் மறையோன்,

> "வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
> ஐயைந் திரட்டி சென்றதற் பின்னும்
> அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
> மறக்கள வேள்வி செய்வோ யாயினை"

என்றான். இவன் கூற்றால் செங்குட்டுவன் வடநாடு சென்று மீண்டபொழுது, ஆண்டு-வையங்காவல் பூண்ட ஆண்டு-ஐயைந் திரட்டி (ஐம்பது) ஆகிவிட்டது. முன்னரே பதினாறு இளமையில் செங்குட்டுவன் ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருக்கக் கூடும் எனக் கருதிக்கொண்டுவிட்டபடியால் இப்பொழுது 66 யாண்டுகள் ஆகவேண்டும்.

செங்குட்டுவன் வடநாடு சென்று இமயத்தில் கல் எடுத்துக் கங்கைக் கரைவர "எண்ணான்கு மதியம்" ஆகின்றது. அதன் பின்னர்ச் சில திங்கள் செலவிட்டே வஞ்சி வந்தடைந்திருக்கக் கூடும். ஆகலின் செங்குட்டுவன் வடநாட்டுச் செலவுக்கு மூன்று யாண்டுகளேனும் செலவிட்டிருக்கலாம். ஆதலால் தனது 63ஆம் ஆண்டில் குன்றக் குறவர்களாலும், புலவர் சாத்தனாராலும் தன் தம்பி இளங்கோவுடன் இருந்து கண்ணகி வரலாற்றை அறிந்து கொண்டான் செங்குட்டுவன். அப்பொழுது இளங்கோவடிகள் அகவை 59 ஆக இருத்தல் வேண்டுமன்றோ!

இமயக் கல்கொண்டு வந்த பின்னர்க் கண்ணகியார் கோவில் கட்டவும், திருச்சுற்றெடுக்கவும், நடுகல் விழா நடத்தவும், அண்டை நாட்டு வேந்தர்களுக்கும், அயல் நாட்டு மன்னர் களுக்கும் அழைப்பு அனுப்பி வரச் செய்தற்கும் ஆண்டுகள் சில கடந்தன. பதிற்றுப்பத்துப் பதிக ஆசிரியர் கூறியவாறு செங்குட்டுவனது 55 யாண்டு ஆட்சியில் எஞ்சியிருக்கும் ஐந்தாண்டுகளையும் இப்பணியிலே செலவிட்டான் என்று உறுதி செய்யலாம்.

தமது ஐம்பத் தொன்பதாம் ஆண்டிலே குன்றக்குறவர் கூறிய கண்ணகியார் வரலாற்றையும், அதனை விளக்கிக் கூறித்

தூண்டியும் வேண்டியும் நின்ற சாத்தனுர் கூற்றையும் உளத்தே தேக்கி ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் எண்ணி எண்ணித் திளைத்த அடிகள் அதன் பின்னரே தம் புலமைச் செறிவும் கலை நலமும் திகழ முத்தமிழ்க் காப்பியமாம் சிலம்பை இயற்றினுர் ஆதல் வேண்டும்.

கண்ணகியாரின் வரலாற்றைக் கேட்டவுடனே அடிகள் நூல் தொடங்கிப் பாடியிருக்கக் கூடாதோ எனின், சாத்தனுர் வரலாற்றை அடிகளிடம் கூறும் இடமே, வரலாற்றின் வேருெரு திருப்பத்திற்கு உரிய இடமாக அமைந்து, அது வஞ்சிக் காண்டமாக வளர்ந்து விடுகின்றது அல்லவா! பிறகு உடனே எப்படிப் பாடத் தொடங்க முடியும்? மேலும் இலக்கியம் நாட் குறிப்பா? அவ்வாறு இருக்குமாயின் கண்ட வுடனே கேட்டவுடனே குறித்து விட முடியும்; குறிக்கவும் வேண்டும். சீரிய காப்பியம் பாடத் தொடங்குவோர் அதன் முடிநிலை தெளிந்தன்றித் தொடங்குதல் இயல்பு இல்லை. அன்றியும் சிலம்பினைச் சிறிது நோக்கிப் பார்ப்பினும் வஞ்சிக் காண்ட நிகழ்ச்சிகள் பல புகார், மதுரைக் காண்டங்களிலே சுட்டப் பெறுவதை உணரக் கூடும். ஆகலான் வரலாறு அனைத்தும் நிகழ்ந்த பின்னரேதான் அடிகள் சிலம்பு பாடத் தொடங்கினுர் என்பது தெளிவாம்.

ஆகையால் பன்னுட்டு வேந்தரும் பாராட்டுமாறு செங் குட்டுவன் சிலைக் கோவில் எடுத்து வழிபாடு செய்த பின்னரே அடிகள் கலைக்கோவிற் பணி தொடங்கினுர். அப்பணி தொடங்கும் காலையில் அடிகட்கு அகவை ஏறக்குறைய 67 ஆக இருத்தல் வேண்டும். காப்பியம் எழுதவும், அரங்கேற்றம் செய்யவும் மேலும் சில பல ஆண்டுகளைச் செலவிட்டு நிறைநாட் செல்வராய்ப் பெருவாழ்வுற்றிருக்க வேண்டும் என்பது உறுதியாகும்.

---

## புறக்கணிக்க முடியாத உண்மை

*"சதுர்மறைஆரியம்வருமுன் சகமுழுதும் நினதாயின்*
*முதுமொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பாமோ."*

*என்னும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் கூற்று மொழிப்பற்று மிக்க புலவர் கூற்று எனப் புறக்கணித்து விடல் இயலாது. பரத கண்டம் முழுவதும் பரவி வழங்கி வந்த பழந்தமிழோடு ஆரியம் கலப்புற்றுப் பல்வேறு கிளை மொழிகள் உருவாகியுள்ளன.*

*—டாக்டர் சி. இலக்குவனுர்.*
*கட்டுரை 'தமிழும் ஆரியமும்'*

# உயிர்மெய் முதல் வேர்ச்சொற்கள்

**குல் — எரிதற் கருத்து வேர்ச்சொல்.**

**[ஞா. தேவநேயன்]**

எரிதற் கருத்தினின்று, சுடுதல், ஒளிர்தல், சிவத்தல், காந்தல், உறைத்தல், நேர்தல், சினத்தல், விரைதல் முதலிய கருத்துக்கள் பிறக்கும்.

குமரிநாட்டு உலகவழக்கும் இலக்கிய வழக்கும் பெரும்பாலும் இறந்துபட்டதனால், பல இணைப்புச் சொற்களை இங்குக் காட்ட முடியவில்லை. எனினும், நடுநிலையொடு நோக்கும் நுண்மதியர்க்கு, இங்குக் காட்டப்பெறும் சொற்களே போதியனவாம்.

குல்—குலா—குலவு. குலவுதல் = விளங்குதல். ''குலவு கோலத்த கொடிநெடு மாடங்கள்'' (தேவா. 794 : 7).

குலவு—குலாவு. குலாவுதல் = விளங்குதல்.

குலப்பம் = செம்புமணல். (W.).

குல்—குர்—குரு. குருத்தல் = சினத்தல். (W.). குரு—வ. க்ருத் (dh).

குரு = 1. ஒளி. ''குருமணித் தாலி'' (தொல். சொல். 303, உரை). 2. சிந்தூரம் (W.). வ. க்ரு (ghr).

குருவெறும்பு = செவ்வெறும்பு, முசிடு. (W.).

குரு—குருதி = 1. சிவப்பு. ''குருதித் துகிலின்னுறையை'' (சீவக. 926). 2. அரத்தம். (திவா.). 3. செவ்வாய். (திவா.).

ம. குருதி.

குருதிக் காந்தள் = செங்காந்தள். (சீவக. 1651, உரை).

குருதிக்கிழமை (வாரம்) = செவ்வாய்க் கிழமை.

''குருதி வாரந் தனக்குக் கொஞ்சநாளிற் கிழியும்'' (அறப். சத. 61).

குரு — குருந்து = மாணிக்க வகையுள் ஒன்று. (W.).

குருந்து — குருந்தம் = மாணிக்க வகை. (W.).

குருந்தம் — குருவிந்தம் = 1. தாழ்ந்த மாணிக்க வகை. (சிலப். 14:186, உரை). 2. குன்றி மணி. 3. சாதிலிங்கம்.

குருவிந்தக்கல் = காவிக்கல். "இரத்தின மறியாதானொருவன் குருவிந்தக் கல்லோடொக்கும் இதுவென்றால்" (ஈடு, 3 : 1 : 2).

குருவிந்தம் — வ. குருவிந்த.

குல் — குது. ஒ. நோ : மெல் — மெது — மெத்து, பல் — பது — பத்து — பஃது.

குது — குதம் = வெங்காயம். (மலை.).

குதம் — குதம்பு. குதம்புதல் = 1. கொதித்தல். 2. சினத்தல்.

குதம் — கதம் = 1. சினம். "கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்" (புறம். 33). 2. பஞ்சம். கதம் பிறந்தது (உ. வ.) — W.

கதகதப்பு = 1. வெம்மை. "கதகதென் றெரியுதே காமாக்கினி" (இராமநா. ஆரணி. 8). 2. இளவெம்மை. மழைக்காலத்தில் கூரைவீடு கதகதப்பாயிருக்கும். (உ. வ.)

கதம் — கதவு. கதவுதல் = சினத்தல். "கதவிக் கதஞ் சிறந்த கஞ்சன்" (திவ். இயற். 2 : 89).

கதவு = சினம். "அவன் யானை மருப்பினுங் கதவவால்" (கலித். 57 : 19).

கத — கதழ் — கதழ்வு. கதழ்தல் = 1. சினத்தல். (திவா.). 2. விரைதல். "கதழெரி சூழ்ந்தாங்கு" (கலித். 25 : 4). 3. மிகுதல். "கதழொளி" (சீவக. 1749).

கதழ்வு = 1. கடுமை. 2. விரைவு (திவா.). 3. மிகுதி. (திவா.).

"கதழ்வும் துனைவும் விரைவின் பொருள" (தொல். உரி. 17).

குல் — குன் — கன் — கனல் = நெருப்பு.

"உழிதரு காலுங் கனலும்" (திருவாச. 5 : 8).

கனலுதல் = 1. எரிதல். "வேமிருந்தை யெனக் கனலும்" (கம்பரா. சூர்ப்ப. 118). 2. சுடுதல். "வயிற்றகங் கனலுஞ் சூலை" (பெரியபு. திருநா. 62). 3. கொதித்தல். "தீப்போற் கனலுமே" (நாலடி. 291). 4. சிவத்தல். "கண்கனன்று... ...நோக்குதலும்" (பு. வெ. 6 : 23). 5. சினத்தல். "மாமுனி கனல மேனுள்" (கம்பரா. நீர்விளை. 2).

கனல்வு = சினம். "இங்கு நின் வர வென்னவெனக் கனல்வெய்த" (கம்பரா. சூளா. 78).

க. கனல், தெ. கனலு.

கனல் — கனலி = 1. நெருப்பு. (திவா.). 2. கதிரவன். "வெங்கதிர்க் கனலி" (புறம். 41 : 6).

கனல் — கனலோன் — கதிரவன். "காடுகனலக் கனலோன் சினஞ்சொரிய" (பு. வெ. பொதுவியற். 10).

கனல் — கனற்று. கனற்றுதல் = 1. எரிவித்தல். "கலந்தவர் காமத்தைக் கனற்றலோ செய்தாய்" (கலித். 148). 2. சுடுவித்தல். வெயில் பிள்ளையுடம்பைக் கனற்றிவிட்டது. (உ. வ.). 3. வெதுப்புதல். "கனற்றக் கொண்ட நற வென்னும்" (புறம். 384).

மிக விளங்குதல். "காதல் கனற்ற நின்றுனும்" (தேவா. 696 : 7).

கனனிறக்கல் = மாணிக்கம். (W.).

குல் — குள் — கள் — காள் — காளம் = சுடுகை.

காளவாய் (காளவாசல்) = சுண்ணும்புக்கல்.

சுடும் சுள்ளை. ம. காளவாய்.

காளவனம் = சுடுகாடு. (சூடா.).

L. calor = heat. E. caloric.

L. calx, G. kalk, E. calc, OS. calc, E. chalk.

LL. calcina = lime, E. calcine = to reduce to quicklime.

காள் — காழ் = 1. ஒளி. (திவா.). 2. பளிங்கு. (பிங்.).

காழ்த்தல் = உறைத்தல். (திவா.). காழ்ப்பு = உறைப்பு. (திவா.).

காள் — கார். கார்த்தல் = உறைத்தல். (பிங்.).

கார் — கார்ப்பு = உறைப்பு. (சூடா.).

காள் — காய். காய்தல் = (செ. குன்றிய வினை) : 1. வெயில் நிலா எறித்தல். நிலாக் காய்கிறது. (உ. வ.). 2. நீர் சூடாதல். வெந்நீர் காய்கிறது. (உ. வ.). 3. உடம்புசுடுதல். உடம்பு காய்கிறது. (உ. வ.). 4. உணத்தல். புழுங்கல் காய் கிறது. (உ. வ.). 5. ஈரம் புலர்தல். வேட்டி காய்கிறது. (உ. வ.). 6. பயிர் வெயிலால் வாடுதல். 7. வயிறு பசியால் எரிதல். 8. புண் ஆறி வருதல். 9. வறுமையால் வருந்து தல். 10. இளைத்தல். ''காய்தலு முண்டக் கள்வெய் யோனே'' (புறம். 258)

(செ. குன்றுவினை) : 1. எரித்தல். ''காமனைக் காய்ந்த கண்ணன்'' ( ? ) 2. அழித்தல். ''கஞ்சனைக் காய்ந்தானை'' (திவ். பெரியதி. 7 : 6 : 5). 3. விலக்குதல். ''கோப முதலிய குற்றங் காய்ந்தார்'' (பெரியபு. அப்பூதி. 2). 4. வெறுத்தல். ''காய்த லுவத்த லகற்றி யொருபொருட்க ணாய்தல்'' (அறநெறி. 22). 5. கடிந்து கூறுதல். ''கறுத் தெழுந்து காய்வாரோடு'' (நாலடி. 315). 6. வருத்துதல். ''காய்கின்ற பழவினை போம்'' (குற்று. தல. நூற்பய. 15).

ம. காய், க. காய், தெ. காயு, து. காயி.

காய்—காய்ச்சல் = 1. வெம்மை. 2. சுரநோய். 3. உலர்ச்சி. அரிசி நல்ல காய்ச்சல். (உ. வ.). 4. வறட்சி. 5. வறுமை.

காய்ச்சுதல் = 1. குழம்பு சமைத்தல். 2. இரும்பை நெருப்பிற் பழுக்க வைத்தல். 3. ஈயத்தை உருக்குதல். காய்த்து — காச்சு.

காய் — காயம் = 1. வெந்த கறித்துண்டு. ''நெய்கனி குறும்பூழ் காய மாக'' (குறுந். 389). 2. உறைப்பு. (பிங்.). 3. மிளகு. ''காயத்தின் குழம்பு தீற்றி'' (சீவக. 788). 4.

கறிக் கூட்டுச்சரக்கு. ''காயங்களான் இனிய சுவைத்தாக்கி'' (குறள். 253, உரை). 5. ஈருள்ளி. ''காயமுங் கரும்பும்'' (சிலப். 25 : 45) 6. பெருங்காயம்.

ம. காயம், தெ. காயமு.

ஐங்காயம் = கடுகு, வெங்காயம், பெருங்காயம், ஓமம், வெந்தயம்.

காய் — காய்ந்து — காந்து. காந்துதல் = 1. (செ. குன்றிய வினை) வெம்மை கொள்ளுதல். 2. ஒளிவிடுதல். ''பரம்பிற் காந்து மினமணி'' (கம்பரா. நாட்டுப். 7). 3. எரிவெடுத்தல். கண்காந்துகிறது. (உ. வ.). 4. சமையு முணவு கருகுதல். சோறு காந்திப் போயிற்று. (உ. வ.). 5. மனங் கொதித்தல். ''புத்தி போய்க் காந்துகின்றது'' (கம்பரா. சடாயுகா. 37). 6. பொருமை கொள்ளுதல். அவனைக் கண்டு காந்துகிறான். (உ. வ.).

(செ. குன்றாவினை) = 1. சுடுதல். 2. வெகுள்தல். ''காந்தி மலைக்குத்து மால்யானை'' (திருவள். 11).

ம. காந்து.

காந்து — காந்தல் = 1. எரிகை. 2. எரிந்த கருகல். 3. காய்ந்த பயிர். (W.). 4. சினம். (W.).

காந்தல் — காந்தள் = 1. செய்கோடல். ''கடிசுனைக் கவினிய காந்தள்'' (கலித். 45). 2. காந்தள் மலரணிந்து வேலன் வெறியாடுவதைக் கூறும் புறத்துறை. (தொல். பொ. 60). 2. முருகனுக்குரிய காந்தள் மலரைச் சிறப்பித்துக் கூறும் புறத்துறை. (பு. வெ. 6 : 9).

ம. காந்தள்.

காந்து — காந்தி = 1. வெம்மை. (மூ. அ.) 2. கதிர் (W.). 3. ஒளி. (சூடா.). 4. அழகு. (பிங்.). 5. காவிக்கல். (W.).

காந்தி — வ. (kanti) காந்தி.

காந்து — காந்தாளம் = சினம். (W.).

காந்தாளம் — காந்தாளிகம் = சின்னி. (மலை.).

காந்து — காந்துகம் = காந்தள்.

L. Cand, shine, be white. L. Candela, cylinder of Spernaceti enelosing with, for giving light. O. E. Candel, E. Candle.

L. Candescere – E. Candescent = glowing with white heat.

L. Candidus, white – E. Candide – E. Candid = frank.

L. Candor – E. Candour = open - mindedness.

L. Candidatus – E. Candidate = Roman aspirant who was white - robed when canvassing votes.

Skt. Chand, shine, chandra – noon that which shines.

காய் — காய்ங்கு — காங்கு — காங்கை = வெப்பம்.

க. காங்கெ, தெ. காக்க (kaka).

காங்கு — கங்கு = கழல் துண்டு.

குள் — குண் — குண்பு — கும்பு. ஒ. நோ : சண்பு — சம்பு, கொண்பு — கொம்பு.

கும்புதல் = சமைக்கும் உணவு தீய்ந்து போதல்.

கும்பல் = கும்பல் நாற்றம். கும்பி வீசுகிறது என்னும் வழக்கை நோக்குக.

கும்பு — கும்பி = 1. தழல். 2. சுடுசாம்பல். தெ. 2. எரி நரகம். "கும்பி கும்மு நரகர்கள்" (திவ். திருவாய். 3 : 7 : 8).

வடமொழியிலுள்ள கும்பீ என்னுஞ் சொல், கும்பத்தையன்றி நரகத்தைக் குறிக்காது. ஆதலால், கலத்திற் சமைத்தல் அல்லது கலத்தைச் சுடுதல் என்று பொருள்படும் 'கும்பீபாக' என்னும் தொடர்ச்சொல்லை, கும்பி (நரகம்) என்னும் தென்சொற்கு மூலமாகச் சென்னைப் ப. க. க. த. அகரமுதலி காட்டியிருப்பது, எத்துணைக் கயமையான தமிழ்ப் பகைமை என்பதை நோக்குக. தீயோர்க்குத் தீயுழி (நரகம்) கலஞ்சுடு சூளையும் அடுகலமும் போன்றிருக்கின்றதாம்!

கும்பியிடுசட்டி — கும்பிடுசட்டி = 1. கணப்புச் சட்டி. 2. தட்டார் நெருப்புச் சட்டி.

தெ. கும்பட்டி, க. கும்பட்டெ.

கும்பிநாற்றம் = கும்பல் நாற்றம்.

குண் — கண் — கண — கணம் = கணைநோய் (பிங்).

கணகணத்தல் = 1. எரிதல். 2. சுடுதல்.

கணகணவென்று எரிகிறது என்பது உலக வழக்கு.

கண — கணப்பு = குளிர் காயும் தீ. கணப்புச்சட்டி = குளிர் காயும் நெருப்புச் சட்டி.

கண — கணை = உடம்புக்காங்கை நோய். கணைச் சூடு என்பது வழக்கு.

கண் — கடு. கடுத்தல் = 1. உறைத்தல். 2. நோவெடுத்தல். 3. விரைதல். "காலெனக் கடுக்குங் கவின்பெறு தேரும்." (மதுரைக். 388). 4. மிகுதல். "நெஞ்சங் கடுத்தது" (குறள். 706). 5. சினத்தல். "மங் கையைக் கடுத்து" (அரிச். பு. நகர்நீ. 110). 6. வெறுத்தல். பொன்பெய ருடையோன் தன்பெயர் கடுப்ப" (கல்லா. 5).

ம. கடு.

கடு — கடுப்பு = 1. தேட்கொட்டுப் போன்ற கூர் நோவு. "கடுப்புடைப் பறவைச் சாதியன்ன" (பெரும்பாண். 229). 2. வெகுளி. "கடுநவை யணங்குங் கடுப்பும்" (பரிபா. 4 : 49). 3. வேகம். "மண்டு கடுப்பினிற் படரும் வாம்பரி" (சேதுபு. கத்துரு. 15.) 3. கடும்புளிப்பு. "தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்" (புறம். 392). 4. உறைப்பு. கடுப்புக் கழிச்சல் = வயிற்றளைச்சல் (சீதபேதி).

கடு — கடுகு = காரமுள்ளது. ம. கடுகு.

கடுகுதல் = 1. மிகுதல். "பசி கடுகுதலும்" 2. விரைதல். "கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்" (மணி. 14 : 80).

கடுகு — கடுகம் = 1. கார்ப்பு. (திவா.). 2. சுக்கு மிளகு திப்பிலி என்னும் முக்கடுகங்களுள் ஒன்று. கடுகம் — வ. கடுக (kátuka). கடு — காடு = மிகுதி. எங்குப் பார்த்தாலும் வெள்ளக் காடு. (உ. வ.).

கடு — கட்டம் = 1. கடுமை. 2. மெய் வருத்தம். கட்டம் — வ. கஷ்ட. ஒ. நோ : நடு — நட்டம்.

கஷ்ட என்னும் வட சொற்குக் 'கஷ்' என்னும் வினை முதனிலையை ஐயுறவு மூலமாகக் குறித்துள்ளார் **மானியர் வில்லியம்சு**. 'கஷ்' என்னும் வினைச் சொற்குத் தேய் என்பதே பொருள்.

கட்டம்—காட்டம்=1. எரிநோவு. 2. உறைப்பு. 3. குணவேகம். சாறுயம் மிகக் காட்டமாயிருக்கிறது. (உ. வ.).

**தெ.** காட்டு (g)

கடு—கடி=1. விளக்கம். "அருங்கடிப் பெருங்காலை" (புறம். 166.) 2. சி ற ப் பு. "அருங்கடி மாமலை தழீஇ" (மதுரைக். 301). 3. மி கு தி. "கடிமுரசியம்பக் கொட்டி" (சீவக. 440). 4. விரைவு. "எம்மம்பு கடிவிடுதும்" (புறம்.9). 5. உறைப்பு. "கடிமிளகு தின்ற கல்லா மந்தி" (தொல். சொல். 384, உரை). 6. அச்சம். "அருங்கடி வேலன்" (மதுரைக். 611). 7. பேய். "கடிவழங் காரிடை" (மணி. 9 : 49).

கடி—கரி கரித்தல்=1. மிகுதல். மிளகு நீர் உப்புக் கரிக்கிறது. (உ. வ.). 2. உறுத்துதல். எண்ணெய் பட்டுக் கண் கரிக்கிறது. 3. வெறுத்தல். "கரித்து நின்றான் கருதாதவர் சிந்தை" (திருமந். 2431). 4. பழித்தல்.

கரி—கரிப்பு= 1. கா ர ம். "ஐயமுங் கரிப்பு மாகலு முரித்தே" (தொல். சொல். 384). 2. உறுத்தம். 3. சுவை மிகை. 4. அச்சம். (திவா.). 5. வெறுப்பு.

கரி—காரம்=உறைப்பு, மிகுதி.

பலகாரம்=பல சுவை மிக்க சிற்றுண்டி.

காரம்=1. உறைப்பு. 2. காரவுப்பு. (W.). 3. சாம்பலுப்பு. 4. வண்ணான் காரம். 5. சாயக்காரம். 6. சீனிக் காரம். 7. வெண்காரம். 8. அக்கர காரம். (தைலவ. தைல. 112). 9. கோளக நஞ்சு. (சங். அக.). 10. திருநீறு. "காரமென்றுரைப்பர்" (திருக்காளத். பு. 26 : 4). 11. சினம். அவன் என்மீது காரமாயிருக்கிறான். (உ. வ.).

**ம.** காரம், **தெ.** காரமு, **க**, **து.** கார.

காரச்சீலை, காரச்சேவு, காரத்துளி (பூந்தி), காரப்பசை, காரப்பொடி, காரமருந்து முதலியன வேகத்தையும் உறைப்பையுமுடைய பொருட்பெயர்கள்.

காரம் = மிகுதி, கடுமை, வலிமை, உரிமை, பொறுப்புரிமை, வினையுரிமை, உறவுரிமை, உடைமை.

காரம் — காரன் = வலியன், உரியன், உடையான். காரி (பெ. பா.). வீட்டுக்காரன் என்பது உரிமையும், பணக்காரன் என்பது உடைமையும், காவற்காரன் என்பது வினையுடைமையும் (குலப்பெயராயின் வினையுரிமையும்), அண்ணன்காரன் என்பது உறவுரிமையும், உணர்த்தும் பெயர்களாம். தோட்டக்காரன், வண்டிக்காரன், மாட்டுக்காரன் என்பன, உரியவனைக் குறிக்காவிடத்துப் பொறுப்புரிமைக்காரனைக் குறிக்கும். உரியவன் சொந்தக்காரன்.

காரன் காரியீற்றுப் பெயர்கள் நூற்றுக்கணக்கின.

காரன் — வ. கார.

வட மொழியாளர் இவ்வீற்றை வடசொல்லாக்குவதற்கு, 'க்ரு' (செய்) என்னும் முதனிலையினின்று திரித்துச் செய்பவன் என்று பொருள் கூறுவர். ஆட்டுக்காரன், கோழிக்காரன், சொந்தக்காரன், தண்ணீர்க்காரன், நாழிமணிக்காரன், புள்ளிக்காரன், முட்டைக்காரன், வெள்ளைக்காரன் முதலிய பெயர்கட்குச் செய்பவன் என்னும் பொருள் பொருந்தாமை காண்க. வேலைக்காரன், கூலிக்காரன் என்பனவும், வினையுடைமையே குறிக்கும்.

செய்வானைக் குறிக்கும் வடமொழி யீறுகள், கார, காரு காரி, காரின் (செய்பவன்), காரிணீ (செய்பவள்) எனப் பல வடிவில் நிற்கும்.

அதிகரித்தல் = மிகுதல். அதிகரி — அதிகாரம் = மிகுதி. வலிமை, உரிமை, நூற்பெரும் பிரிவு. அதிகாரம் — அதிகாரி, அதிகாரன். அதிகரி என்னும் வினைச்சொல் வடமொழியில் இல்லை. அதித்தல் = மிகுதல். அதி — அதனம் = மிகுதி. இச்சொல்லும் வடமொழியில் இல்லை. அதிகரி என்பது ஒரு மீமிசைச் சொல்.

**பிழை திருத்தம்** - முந்தின வேர்ச்சொற் கட்டுரையில் ஸ்தூணை என்பதைத் த்ரோண என்றும், 'சீரிய கொள்கைச் சிதம்பரப் பதிக'த்தில் வேற்றரசு என்பதை வேற்றூர் என்றும் திருத்திக் கொள்க.

———

# பேச்சுத்தமிழில்–எதிர்மறை வினை

[செஞ்சொற் கொண்டல்
புலவர். செ. சிங்காரவேலன் M.A., Dip, Ling.,
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

1.0. மொழியின் உயிர்நிலை அதன் இயக்கத்தில் இருக்கிறது. மக்கள் வாயில் புகுந்து புறப்படும்போதே மொழி இயங்குகின்றது என்று கொள்ளலாம். வெறும் எழுத்து மொழியாக மட்டும் ஒரு மொழி இருந்து விடுமானால், அந்த மொழி உயிர் இல்லாத மொழி என்று கூறப்படுவதையும் நோக்குகின்றோம். ஆதலின், பேச்சு வழக்குத்தான் ஒரு மொழியின் உயிர்த்தன்மையை முடிவு செய்கின்றது என்று காணலாம். இஃது எம்மொழிக்கும் பொதுவான உண்மையாக உள்ளது. ஆகவே, பேச்சுமொழி பற்றிய ஆய்வும் சிந்தனையும் மொழியுலகில் புறக்கணிக்க முடியாதவை. எழுத்துமொழி மட்டும் மொழி ஆய்விற்குப் பல புதிய நிலைகளைச் சுட்டு வதற்குப் போதாது.[1]

1.1. திராவிட மொழிகளை ஆராய்ந்து ஒப்பிலக்கணம் எழுதிய அறிஞர் கால்டுவெல் பெரும்பாலும் எழுத்து மொழி வடிவங்களையே ஆராய்ந்து முடிவுகண்டார். ஆனால் சூல்சு பிளாக்கு என்னும் அறிஞர் எழுத்துவடிவ அமைப்புடன் பேச்சு வடிவ அமைப்பையும் ஒப்பநாடித் தமது திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணத்தைச் செய்துள்ளார்.

1.2. திராவிடமொழிகளில் பழைமை உடையதாகிய செந்தமிழ் இன்று எழுத்துமொழிக்கும் பேச்சுமொழிக்கும் பெரும் இடைவெளியைக் கொண்டு விளங்கக் காண்கின்றோம். தமிழ் இலக்கண நெறிப்படி எழுதுவோர் பலரும் பேசும்போது எழுத்துமொழியின் நெகிழ்வு அமைப்பாகிய பேச்சு மொழியையே கையாளக் காண்கின்றோம். எழுதுவது போல் பேசுவோர் விரல்விட்டு எண்ணத்தக்க ஒருசிலரே உள்ளனர். நடையியல் (Realism) காட்டும் பலர் பேசுவது போலவே எழுதவும் தொடங்கி விட்டனர். அன்னோரது நடை அனைவர்க்கும் புரிவதாகவும், உள்ளத்திற் பொருந்துவதாகவும், உணர்த்துவதற்கும் எளிதாகவும் உள்ளமையால் அவர்களது

---

1. பார்க்க: "பேச்சு மொழியும் எழுத்து மொழியும்"—மொழி வரலாறு, டாக்டர். மு. வரதராசனார் (1969) —pp. 6—15; 387—388.

எழுத்துக்கள் கற்றோரிடையும் மற்றோரிடையும் செல்வாக்குப் பெற்றுள்ளன. பேச்சு நடையில் எழுதலாமா? அஃது இலக்கண நெறிவந்த எழுத்து நடைக்கு மாறல்லவா என்று கேள்வி எழுப்புவோரும் இல்லாமல் இல்லை; பெரும்பான்மையோர் கோட்பாட்டையே பின்பற்றிவரும் குடியாட்சி (Republic) உலகாதலின், மொழியுலகிலும் இக் குடியாட்சியே பெருகிச் செழிக்கலாயிற்று. ஆதலின், சிறுபான்மையோர் கேள்வி பெரும்பான்மையோரை மாற்றம் செய்யாததும் காணும் உண்மையே.

2.0. பேச்சுத்தமிழில் இன்று வழங்கிவரும் பல மாற்றங்கள் சிந்தித்தற்குரியன. எடுத்துக்காட்டாக எதிர்மறை வினைமுற்று எச்சங்களை இங்குச் சிந்திக்கலாம்.

2.1. எதிர்மறை இடைநிலைகள் பலவற்றைப் பழந் தமிழிற் காணலாம்.

| | | |
|---|---|---|
| வந்தனன் | — | (உடன்பாடு) |
| வந்திலன் | — | (எதிர்மறை.)—இல்— |
| உண்டனன் | — | (உடன்பாடு.) |
| உண்ணலன் | — | (எதிர்மறை.)—அல்— |
| படித்தேன் | — | (உடன்பாடு.) |
| படித்திலேன் | — | (எதிர்மறை.)—இல்— |
| உண்டேன் | — | (உடன்பாடு.) |
| உண்ணலேன் | — | (எதிர்மறை.)—அல் — |
| கண்டாய் | — | (உடன்பாடு.) |
| கண்டிலை | — | (எதிர்மறை.) — இல்— |
| உண்டாய் | — | (உடன்பாடு.) |
| உண்ணலை | — | (எதிர்மறை.)—அல்— |

இவை ஒருவகையாக அமைந்தவை. இவற்றுள், மூவிடங்களிலும், —**அல்**—, —**இல்**— என்பன எதிர்மறை உணர்த்தும் இடைநிலைகளாக அமைந்துள்ளமையைக் காணலாம்.

இனி வேறுவகையான எடுத்துக் காட்டுக்களும் காணப்படும்.

வாரான் — (எதிர்மறை.)—ஆ—
உண்ணேன் — எதிர்மறை.)—ஏ—
உண்ணாய் — (எதிர்மறை.—ஆ—

இவற்றுள் —ஆ—, —ஏ— என்பன எதிர்மறை உணர்த்தின.

2.2. இன்று, இல்லை, அன்று, அல்ல என்பன எதிர்மறை உணர்த்தும் குறிப்பு வினைமுற்றுக்களாகப் பழந் தமிழில் வழங்கி வந்தன. இல்—, அல்—, என்ற எதிர்மறை வினையடியாகப் பிறந்தவை இவை.

எதிர்மறைப் பொருளை உடைய வியங்கோள்வினை முற்றுக்கள் பழந்தமிழில், —அல், —ஏல் முதலிய விகுதி களுடன் வழங்கி வந்தன.

'மகன் எனல்' (குறள் 196)

'உண்ணேல்' என்றெல்லாம் வரும் எண்ணற்ற எடுத்துக் காட்டுக்கள் பழைய இலக்கியங்களுட் காணப்பெறும்.

2.3. இன்று பேச்சுத் தமிழில் எதிர்மறை வினை முற்றுக்கள் எவ்வாறு அமைந்துள்ளன?

வாரான் — என்பது **'வரமாட்டான்'** என்றோ, **'வரவில்லை'** என்றோ வழங்குகின்றது. இவ்வாறே மூவிடங்களிலும் வழங்கிடக் காணலாம். இங்கே, செயவென் எச்சத்தோடு **'மாட்டு,'** **'இல்லை'** என்பனவற்றைச் சேர்த்திடக் காண்கின்றோம். இந்த அமைப்புப் பழைய எதிர்மறை முற்று வடிவத்தோடு மாறிவரக் காணலாம்.

**வினைப்பகுதி + எதிர்மறை இடைநிலை + விகுதி என்றிருந்த அமைப்பு,**

**வினைப்பகுதி + செயவெனெச்ச விகுதி + மாட்டு (இல்லை) + (விகுதி)**

என்று மாறி இருத்தல் கண்கூடு. இந்த மாற்றம் எளிமைப் பட்டு வரும் மொழியின் நிலையைச் சுட்டுவதாகும்.[1]

வரவில்லை, செல்லவில்லை, தின்னவில்லை என்றெல்லாம் 'இல்லை' என்பதனைச் செயவென் வடிவத்துடன் (infinitive)

---

1. (a) *மொழி வரலாறு (மு.வ.)* pp. *274—275; 277—280.*
   (b) Language, J. Vendryes, P. *239.*

ஒட்டுவதே இன்று பெருவழக்காக வரும் எதிர்மறைவினைமுற்று வடிவம் ஆகும்.

'மாட்டு' என்பது தன்னுடைய முன்னைய தனி வினைத் தன்மையை இழந்து, இன்று மற்ற வினைப்பகுதியோடு சேர்ந்து எதிர்மறைப் பொருள் உணர்த்துவதற்கே பயன்பட்டு வருகின்றது.

வியங்கோள் வினைகள், வரவேண்டாம், உண்ண வேண்டாம் என்று, செயவென் வடிவத்துடன் வேண்டாம் என்பதனை ஒட்டுவதனால் இன்று அமைகின்றன. 'மாட்டு' என்பதற்கு நேர்ந்த மாற்றத்தை ஒத்ததே இதுவும்.

இனி, வாராது, காணாது, செய்யாது, வாராமல், காணாமல், செய்யாமல், வாராமே, காணாமே, செய்யாமே என்பனவற்றிற் காணப்பெறும் —உ, —மல், —மே முதலிய விகுதிகள் மாறிய நிலையில் இன்றைய பேச்சுத்தமிழில் எதிர்மறை வினையெச்சங்கள் எப்படி வழங்குகின்றன?

—மல் ஈற்று எதிர்மறைவினையெச்ச வடிவங்களே இன்று பெரும்பான்மையாக இருக்கின்றன; இது 'ல்' கெட்டு நிற்றலும் பெருவழக்கினதே.

| | |
|---|---|
| உண்ணமல் | (மல்) / உண்ணம (ம) |
| தின்னமல் | ( ,, ) / தின்னம (ம) |
| ஆடாமல் | ( ,, ) / ஆடாம (ம) |
| பாடாமல் | ( ,, ) / பாடாம (ம) |

என்று இவ்விகுதி பெருவழக்கினதாக இருத்தலைக் காண்கின்றோம்.

2.4. எதிர்மறைப் பெயரெச்சங்களைப் பொறுத்தவரையில் மாற்றம் ஏதும் விளைந்திடவில்லை. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள் இன்று வாழ்விழந்து விட்டமை ஒன்றே காணப்படுகின்றது. இப்போது யாரும் 'ஓடாக் குதிரை' என்றோ, 'பாடாப் பாட்டு' என்றோ, 'மூடாக் கதவு' என்றோ பேசுவதில்லை; 'ஓடாத குதிரை,' 'பாடாத பாட்டு,' 'மூடாத கதவு' என்பனவே எளிமையாக யாவரும் வழங்கிவரும் வழக்குகள். ஆனால், எழுத்துத்தமிழில் மட்டும் இது பழைய நிலையில் உள்ளது. செய்யுள் வழக்கில் அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ளது. ஆனால், பாடநூல்களில் மட்டும் இலக்கணக் குறிப்பு என்று வந்துவிட்டால், ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தைக் கேளாத ஆசிரியரும் இல்லை; புரியாத மாணக்கர்களும் இல்லை.

**2.5.** இனி 'Conditional' எனப்பெறும் பகுதிசார்ந்த வினையெச்ச விகுதிகளைப் பொறுத்த வரையில் —ஆட்டி என்ற ஒரு புதிய விகுதி பெருவழக்கில் வழங்கிடக் காண்கின்றோம். கீழ்வருமாறு அதன் வடிவங்களைத் தெளிவுபடுத்தலாம்.

வராவிட்டால் > வராட்டி
நடவாவிட்டால் > நடக்காட்டி
பாடாவிட்டால் > பாடாட்டி
கூப்பிடாவிட்டால் > கூப்பிடாட்டி

இப்படி ஒரு மாற்றம் காணப்பெறுகின்றது.

சில பகுதிகளில், இந்த —ஆட்டி என்பதற்கு மாறாக — ஆட்டா என்றும் வழங்கும் :

வராவிட்டால் > வராட்டா
நடவாவிட்டால் > நடக்காட்டா
பாடாவிட்டால் > பாடாட்டா
கூப்பிடாவிட்டால் > கூப்பிடாட்டா

பேச்சுவழக்கில் 'ஆல்' என்பது 'ஆ' என்று குறுகி நிற்கும் இயல்புதான் (வந்தால் > வந்தா, போனால் > போனா, நடந்தால் > நடந்தா) இந்த வகையான மாற்றத்தின் காரணங்களுள் ஒன்று என்று கூறலாம்.

**2.6.** எதிர்மறை வினைமுற்றுக்களை வினாக்களாக்கும் முறை பழந்தமிழில் மிகவும் எளிமையான அமைப்புக் கொண்டது.

வந்தான் > வந்தானா?

போன்ற உடன்பாட்டுச் சொற்றொடரைப் போன்ற அமைப்பினதே இதுவும்.

வந்திலன் > வந்திலனா? / வந்திலனோ?
வாரான் > வாரானா? / வாரானோ?
கண்டிலை > கண்டிலையா? / கண்டிலையோ?

என்ற மாற்றமே பேச்சுத்தமிழில் இன்று விளைந்துள்ள மாற்றமும்.

வரவில்லை > வரவில்லையா? / வரவில்லையோ?
வரமாட்டான் > வரமாட்டானா? / வரமாட்டானோ?

என்ற வினாச் சொற்றொடராக்கம், முன்னைய எதிர்மறைவினை முற்று வினாச்சொற்றொடராக்கத்துடன் வேறுபடாமலேயே உள்ளமை நோக்கத்தக்கது.

---

# சங்க இலக்கியத்தில் மாழ்கி

[திரு. பி. எல். சாமி, பி எஸ்ஸி.,]

அகநானூற்றில் 'மாழ்கி' என்றொரு சொல் 104ஆம் பாட்டில் வருகின்றது.

"வாங்குசினை பொலிய வேறிப் புதல
பூங்கொடி யவரைப் பொய்யத ளன்ன
வுள்ளில் வயிற்ற வெள்ளை வெண்மறி
மாழ்கி யன்ன தாழ்பெருஞ் செவிய
புன்றலைச் சிறுரோ டுகளி மன்றுழைக்
கவையிலை யாரி னங்குழை கறிக்குஞ்" —அகம் 104.

மாழ்கி என்ற சொல்லை வினைச் சொல்லாகக் கொண்டு மயங்கி விழுந்தாற்போல என்று உரை கூறியுள்ளனர். வெள்ளாட்டுக் குட்டியின் மடங்கிய காது மயங்கி விழுந்தாற்போல இருந்த தாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அதை விடச் சிறப்பாகவும் பொருத்தமாகவும் மாழ்கி என்ற செடியன்ன காதையுடைய வெள்ளாட்டுக்குட்டி என்று கொள்ளலாம். மாழ்கி என்பது ஒரு செடியென்பதை நீலகேசியிலிருந்து உணர்கிறோம்.

"யாதினு மாழ்குமம் மாழ்கியு மென்றுழி
நீதின்னும் தோலை நெருப்பொடு கூட்டத்தி
னேதினை தேறுற நீர்க்குரைத் தாயமற்றுஞ்
சேதனை யில்லாய் திரிவென்னை வண்ணம்" —நீலகேசி 365.

நீலகேசிப்பாட்டிற்கு அரிய, சிறந்த உரை யெழுதியுள்ள சமயதிவாகரர் 'மரமுயிருடைய, தீண்ட மாழ்கியும் சுண்டில் முதலியனவும் தீண்டினும் கற்கொண்டெறியினும் இன்னோ ரன்ன பிறவெச்செயலானும் மயங்குதலால்' என்று உரை கூறியுள்ளதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். தீண்ட மாழ்கி என்பதும் சுண்டில் என்பதும் தீண்டினாலும் கல்லால் எறிந் தாலும் மயங்கும் என்பது கூறப்பட்டுள்ளது. தீண்டினும் கற்கொண்டெறியினும் மாழ்கி முதலாயின மாழ்குவதும் முன்னின்ற மலர்ச்சியொழிவதும் சிறிது பொழுது கழிந்தால் முன்பு போல்வதும் காண்கிறோமல்லமோ என்று இங்கு விரிவுரை கூறப்பட்டுள்ளது. மாழ்கி என்பது தொட்டாற் சுருங்கி என்ற செடி என்றும் சுண்டில் ஒருவகைக் கொடி என்றும் பிற்காலத்தில் விளக்கம் கூறினர். சமயதிவாகரர் 'தீண்டமாழ்கி' என்ற பெயரையும் சுண்டில் என்ற பெயரையும் குறிப்பிட்டுள்ளார். இந்தச் செடியைத் தற்காலத்தில் தொட்டால் சுருங்கி என்று பல இடங்களில் வழங்குவர். சில விடங்களில் தீண்டநாழி என்றும் வழங்குகின்றனர். மலையாள மொழியில் தீண்டநாழி என்ற பெயர் இன்னும் வழங்குகின்றது. தீண்டநாழி என்ற பெயர் 'தீண்டமாழ்கி' என்ற பெயரின் மாற்றமாகவே தோன்றுகின்றது. ஆகவே, மாழ்கி என்பது தொட்டாற் சுருங்கி என்று தெளிவாகின்றது. வெள்ளை

வெண்மறியின் செவி மாழ்கியின் இலைபோலத் தாழ்ந்து மடிந்திருக்கும் என்று அகநானூற்றுப்பாடல் கூறுவதாகக் கொள்வது பொருத்தமும் சிறப்புமாகும். தொட்டாற் சுருங்கிச் செடியைத் தொட்டவுடன் மேலே நோக்கியிருக்கும் வரிசையான இரு இலைகள் கீழே தாழ்வதைப் பார்த்திருக்கலாம். இரண்டு இலைகள் தாழ்ந்து மடங்கியிருப்பதையே ஆட்டுமறியின் மடங்கிய காதிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. மற்றும் கோழியின் கழுத்திற்குக் கீழ்த் தொங்கும் இலைபோன்ற சதைப் பாகத்தை ஆச்சாவின் கவைபட்ட இலைக்கு ஒப்பிட்டு அகநானூறு (287) கூறுவதைக் காணலாம். ஆதலின், ஆட்டின் காதுகளுக்கு மாழ்கியின் இலையை ஒப்பிட்டு அகநானூறு கூறியதாகச் சொல்வதே சிறப்பாகும். சிவப்புப் பிணந்தின்னிக்கழுகின் காதுபோன்று தொங்கும் சதைப்பகுதியைக் குறித்துக் 'காதிலைக் காரன்' என்று இக்கழுகை மலையாளத்தில் வழங்குவதையும் காணலாம். காதை இலையோடு ஒப்பிடும் ஒரு மரபு இதில் தெரிகின்றது.

சுண்டில் என்பது தொட்டாற் சுருங்கிச் செடிக்கு இடைக் காலத்தில் வழங்கிய பெயராகத் தெரிகின்றது. சோழ அரசனான இராசாதிராசன் (1046) கல்வெட்டில் 'தெந்திய மரத்தின் மேலைக்காலுக்கு மேற்கு.......சுண்டி லெரிவதிக்க கிழக்கு' என்ற வரி காணப்படுகின்றது. சுண்டிலேறி என்ற பெயரில் சுண்டில் என்பது தொட்டாற் சுருங்கியைக் குறிக்கின்றது. இந்தச் செடி ஏரி ஓரத்திலும் ஆற்றோரத்திலும் நன்கு வளரும். சுண்டில் என்பது சுருங்குவது என்று பொருள்படும். சுண்டைக்காய் என்ற பெயரில் சுருங்குவது என்ற பொருள் காணப்படுகின்றது. சங்ககாலத்தில் தொட்டாற் சுருங்கிச் செடியை மாழ்கி என்றழைத்தனர். இச்செடியே அல்லது அதன் இனமான செடியே சுண்டில் என்று இடைக்காலத்தில் அழைக்கப்பட்டது. இதைத் தொட்டாற் சிணுங்கி என்றும் தொட்டால் வாடி என்றும் தீண்டநாழி என்றும் நாட்டு மக்கள் வழங்குவர். தமிழ்நாட்டில் தொட்டாற் சுருங்கியில் இரண்டு இனங்கள் உள. ஒன்று குத்துச் செடியாகவும் மற்றொன்று நீண்ட செடியாகவும் வளரும். கொடியாக வளருவது பிரேசில் நாட்டில் இருந்து இந்தியாவிற்கு இறக்குமதியாகிப் பரவின செடி என்று அறிவியலார் கருதுகின்றனர். நம் நாட்டிற்குச் சொந்தமான குத்துச் செடியான தொட்டாற் சுருங்கியிலும் இருவகைகள் உள்ளன. அவை இரண்டையும் மாழ்கி என்றும் சுண்டில் என்றும் அழைத்ததாகக் கருதலாம். இந்த இரண்டு வகைத் தொட்டாற் சுருங்கிச் செடிகளைச் செடி நூலில் Biophytum reinwardii, Biophytum Sensitivum என்று கூறுவர். மாழ்கி என்பதும் இதுவே என்று கருதவேண்டும்.

# யானைக்கும் அடிசறுக்கும்

[பேராசிரியர், ஆ. சிவலிங்கனார், மயிலம்]

'யானைக்கும் அடிசறுக்கும்' என்பது பழமொழி. யானை யானது சேற்று நிலத்தில் நடந்தாலும் அடி சறுக்காது. யானை யின் காலடிப் பாகம் வட்டமானது; பெரியதாக இருப்பது. யானை, காலைத் தூக்கி வைக்கும்போது, நம்போல் உந்திய நிலையில் வைக்காமல்—காலின் பிற்பகுதிக் கால் முன்னும், விரற் பகுதி பின்னுமாகப் பதிய வைக்காமல் முழுப் பகுதியும் ஒரே காலத்தில் பதியும்படி எடுத்து வைத்தலின், வழுக்கி விழக்கூடிய நிலத்திலும் சறுக்காமல் நடக்கும். அத்தகைய யானையும் ஒருகால் சறுக்கிவிழவும் கூடும். அதுபோல, 'ஒருவன் எவ்வளவு ஆற்றல் உள்ளவனாக இருந்தாலும் அவனுக்கும் ஒருகால் தவறு ஏற்படக் கூடும்' என்ற கருத்தில்தான் அப் பழமொழி ஆளப் படுகிறது.

அந்நிலையில் மிகத் திறம்பட—யாவரும் போற்ற நெஞ்சை யள்ளும்படியாகச் சிலம்பினை யாத்த பேரருள் முனிவராகிய இளங்கோவடிகளும் சறுக்கிய இடம் சிலம்பில் உண்டு. அடிகள்,

*"அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூஉம்*
*உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்*
*ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்*
*சூழ்வினைச் சிலம்பு காரண மாக*
*நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"*

(சிலப். பதிகம் 55-60)

என்று சாத்தனாரிடம் கூற, அவர்,

*"முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது*
*அடிகள் நீரே யருளுக"* (சிலப். பதி. 61-62)

என்று சொன்னதால் மூவேந்தர்க்கும் தம் பாடலால் யாதொரு குறைவும் நேராதபடி சிறப்பாகச் சிலப்பதிகாரத்தைப் பாடி முடித்தார். சாத்தனார் தம்மால் மூவேந்தர்க்கும் ஒத்த நிலையில் சிறப்பெய்துமாறு பாட முடியாது எண்றெண்ணியே இளங்கோ வடிகளைப் பாடச் சொன்னார். இளங்கோவடிகளும் அப்படித் தான் பாடினார். என்றாலும் அவரையும் அறியாமல் வழுக்கிய இடம் உண்டு. அவர் அறிந்து வழுக்கிய இடமும் உண்டு.

சோழன் பகுதியாகிய புகார்க் காண்டத்தில் அவன் சிறப்புகள் எல்லாம் கூறிக் கானல்வரி என்ற பகுதியின் முடிவில்,

''மாயிரு ஞாலத் தரசு தலைவணக்கும்
சூழி யானைச் சுடர்வாட் செம்பியன்
மாலை வெண்குடை கவிப்ப
ஆழி மால்வரை யகவையா வெனவே'' (சிலப். 7 : 52)

மாதவி வாழ்த்திச் சென்றதாக முடித்துச் சிறப்பித்தார். 'மாயிரு ஞாலத் தரசு தலை வணக்கும் செம்பியன்' என்று சோழனைச் சிறப்பித்தது போலவே மதுரைக் காண்டத்துப் பாண்டியனைப் பற்றியும்,

''......................வேந்தர்
மருள வைகல் வைகல் மாறட்டு
வெற்றி விளைப்பது மன்னோ கொற்றத்து
இடிப்படை வானவன் முடித்தலை யுடைத்த
தொடித்தோள் தென்னவன் கடிப்பிகு முரசே''
(சிலப். 17 : 38)

என ஆய்ச்சியர் குரவை முடிவில், 'வேந்தர் மருள வைகல் வைகல் மாறட்டு வென்றி விளைப்பது' எனச் சிறப்பித்தார். சேரனைப் பற்றிய வஞ்சிக் காண்டத்துக் குன்றக் குரவை முடிவில்,

''உண்டு மகிழ்ந் தானா வைகலும் வாழியர்
வில்லெழுதிய இமயத் தொடு
கொல்லி யாண்ட குடவர் கோவே'' (சில. 24-26)

எனச் சிறப்பித்தார்.

ஒவ்வொரு காண்டத்திலும் ஆங்காங்கு ஒவ்வொருவரும் உலகை யாண்டவர்கள் என்று கூறியுள்ளார். அதனால் யார்க்கும் தனிச் சிறப்பு வந்துவிடவில்லை. இப்படிப் பொது வாகவே பாடிய அடிகள் தம் அண்ணன் செங்குட்டுவனைப் பற்றிப் பாடியபோது, தம்மையும் அறியாமல் செங்குட்டுவனுக் குயர்வும் மற்றவர்க்குக் குறைவும் ஏற்படும்படி பாடிவிட்டார்.

வஞ்சிக் காண்டத்து வாழ்த்துக் காதையில் வஞ்சி மகளிரின் வரிப் பாடல்களில் மூவேந்தர் பெருமையும் கூறியிருப்பினும் சேரனுக்குத் தனிச் சிறப்பும் கூறப்பட்டுளது.

''வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
தென்குமரி யாண்ட செருவிற் கயற்புலியான்
மன்பதைகாக்கும் கோமான் மன்னன் திறம்பாடி

*மின்செய் யிடை நுடங்க ஆடாமோ வூசல்*
*விறல்விற் பொறிபாடி யாடாமோ வூசல்"* (சிலப். 29-25)

என்ற பாட்டில் 'தென்குமரி யாண்டான்' எனப் பாண்டி நாட்டை யாண்டதாகக் கூறிவிட்டார் அடிகள். இது பாண்டியனுக்குக் குறைவு தருவதேயாம். சேரனைச் சிறப்பிக்க வேண்டிப் பாடினுர் என அமைதி கூறலாம். பொதுவாகச் சொல்லாமல் தென்குமரியைக் கூறியது குறைவு தருவதேயாம். அன்றியும் 'செருவிற் கயற் புலியான்' எனப் பிறர் இலச்சினையையும் உடையவனுகக் கூறியதும் பிற வேந்தரைக் குறைவு படுத்தியதேயாம். இளங்கோவடிகளின் இச் சறுக்கு நிகழ்ச்சி தம்மை யறியாமலேயே வந்ததாகக் கொள்ளலாம். இனி அறிந்தே சறுக்கிய இடம் காண்போம்.

கானல் வரிப் பாடலில் கோவலன் "திங்கள் மாலை" எனத் தொடங்கும் பாடலைப் பாடியதாகக் கூறினுர். அப்பாடலில் வரும்,

*"திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சிக்*
*கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி"*

(சிலப். 7 : 2)

என்னும் இரண்டு வரிகளால், 'சோழன் கங்கை நாடு கொள்ளும் விறல் உள்ளவன்' என்பதைப் புலப்படுத்தினுர். மேலும்,

*"மன்னு மாலை வெண்குடையான் வளையாச் செங்கோ லதுவோச்சிக்*
*கன்னி தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி"*

(சிலப். 7 : 3)

என அச்சோழன் கன்னிநாட்டினைக் கொண்டு ஆளும் விறல் உள்ளவன் எனப் புலப்படுத்தினுர். சோழனைச் சிறப்பிக்க வந்தவிடத்தில் இப்படிப் பாடுவது தவறில்லை என்னலாம். வாழ்த்துக் காதையில் 'தென்குமரி யாண்ட செருவிற் கயற் புலியான்' என்று சொன்னதுபோல இதுவும் அமைந்தது என்னலாம். அப்படிச் சொல்லி அமைதி காணுதற்கு, 'சேரனின் ஆற்றைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி' என்று சொல்லியிருந்தாராஞல் இடமுண்டு. அப்படிச் சொல்லாமல்

*"உழவ ரோதை மதகோதை யுடைநீ ரோதை தண்பதங் கொள்*
*விழவ ரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி"*

(சிலப். 7 : 4)

என்று வேறு கருத்தைச் சொல்லி விட்டார்.

ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்த ஆற்றுவரிப் பாடலில் சோழனின் சிறப்புக்' கூறியபோது, அவன் வடநாட்டை வெல்வதும் பாண்டிய நாட்டை வெல்வதும் கூறிச் சேரநாட்டை வெல்வது கூருததேன்? சேரநாட்டுக்குரிய ஆன்பொருந்தம் என்ற ஆற்றையோ பேரியாற்றையோ புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி என்று பாடியிருக்கலாமே! அப்படிப் பாடினுல் அது தம் அண்ணனுகிய செங்குட்டுவனைத் தாழ்த்தியதாகி விடும். இந்த எண்ணம் "திங்கள் மாலை" என்பதையும் "மன்னு மாலை" என்பதையும் எழுதிய பின்னர் வந்தமையால் தான் அடிகள் சேரன் ஆறுபற்றிக் கூருது ஒதுங்கினுர். எனவே இஃது அறிந்தே செய்தது. சோழன், 'கன்னி (பாண்டிய நாடு) தன்னைப் புணர்ந்தாலும்' எனப் பாண்டிய நாட்டை வெல்லும் திறன் மட்டும் கூறிப் பாண்டியனுக்குக் குறைவு நேரும்படி செய்து விட்டார். தம் அண்ணனைக் காத்துவிட்டார்.

'கன்னிதன்னைப் புணர்ந்தாலும்' எனச் சோழனைப் புகழு மிடத்திலும், 'தென்குமரி யாண்ட' எனச் செங்குட்டுவனைப் புகழுமிடத்திலும் பாண்டியனே குறைவுபடுத்தப்பட்டான். அடிகளுக்குப் பாண்டியனைக் குறைவுபடுத்தும் நோக்கம் சிறிதும் இல்லை யென்ருலும் அவர்க்கு அது சறுக்கு நிலையேயாம்.

'தென்குமரியாண்ட' எனச் செங்குட்டுவனைக் கூறியது தவறில்லை என்னலாம். முன்னேர் செயலைப் பின்னேர்க்கு ஏற்றிச் சொல்வது மரபே. கல்வெட்டுகளில் இம் மரபைக் காணலாம். 'செருவிற் கயற்புலியான்' என்றதும் அப்படியே. இதுபோலப் பாண்டியனையும் அடிகள் கூறியுள்ளார்.

*"கயலெழுதிய இமய நெற்றியின்*
*அயலெழுதிய புலியும் வில்லும்*
*நாவலந் தண்பொழில் மன்னர்*
*ஏவல் கேட்பப் பாரர சாண்ட*
*மாலை வெண்குடைப் பாண்டியன்"*

(சிலப். 17 : 1—5)

என ஆய்ச்சியர் குரவையில் சேர சோழர் ஏவல் கேட்பப் பாண்டியன் ஆண்டான் என்ருர். செங்குட்டுவன் கேட்பச் சிலம்பினை யரங்கேற்றியபோது இந்த இடம் செங்குட்டுவ னுக்குச் சினத்தை மூட்டக் காரணம் இல்லை. இவ்வாறு பாடுவது மரபுதான் என்று அவனும் உணர்ந்திருப்பான். ஆனுல், தற்போது இருக்கும் அரசனைப் பாடுங்கால் அவன்

செயலாகப் பாடும்போது பிறர்க்குக் குறை வராமல் பாட வேண்டும். "திங்கள் மாலை" என்ற கானல் வரிப்பாடல் அக்காலச் சோழனைப் பற்றியது. அவன் இனிச் செய்யலாம் செயல் கங்கை கொள்வதும் கன்னி (குமரி) கொள்வதுமாம். இந்த இடத்தில் சேரநாட்டு யாறு ஒன்றைக் கொள்வதாகக் கூறுவதே செங்குட்டுவனைக் குறைபடுத்துவதாகும். தன் காலத்தரசன் தன்னை வெல்வதாகப் பாடுதல் தனக்குக் குறை தானே? அதனால்தான் இளங்கோவடிகள் மூவேந்தருள் ஒருவரைப் பாடுங்கால் மற்றவர்க்குக் குறைவரா்மல் பாடும் போது அவரை உயர்த்தற் பொருட்டு முன்னோர் செயலால் உயர்த்தினர். கானல் வரிப் பாடலில் மட்டும் திடீர்த் திகைப்பு ஏற்பட்டுத் தம் அண்ணனுக்குக் குறைவு வராமல் காத்தார். இஃதவர்க்கொரு சறுக்கு என்றே கருதுகின்றேம். அறிஞர் கருத்து யாதோ?

---

## இரு குறிப்புக்கள்

வ. உ. சி. நூற்றாண்டு விழா மலரில் (ஆவணி-72) வெளிவந்த 'வ. உ. சி. யின் இலக்கணப் பதிப்புப் பணி' என்ற தலைப்பிட்ட கட்டுரையில், மேலும் இணைத்துக் கொள்ள வேண்டிய இன்றியமையாக் குறிப்புக்கள் இவை:

1. 1910-ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் (Vol XVII No. 10) வெளியான 'செந்தமிழ்' பதினேழாம் தொகுதியில், வ. உ. சி. யால் பதிப்பிக்கப் பெற்ற, தொல்காப்பியம், அகத்திணையியல், புறத்திணையியல் பதிப்பைப் பற்றிய மதிப்புரை ஒன்று வரையப்பட்டிருக்கிறது. இம்மதிப்புரையில், "இதன் ஒரு பகுதியாகிய எழுத்ததிகார உரைமாத்திரம் தனித்து முன்பு பதிக்கப் பட்டுள்ளது" என்ற குறிப்பு உள்ளது. அப்பதிப்பு, வ. உ. சி. அவர்களுடையதாயின், தொல்காப்பிய எழுத்ததிகாரப் பதிப்பு 1910-ஆம் ஆண்டுக்கு முன்பே வெளிவந்திருத்தல் கூடும். இது மேலும் ஆராயத் தக்கது.

2. பக்கம் 19 இல், 1868-இல் தொல்காப்பியப் பதிப்புக்கள் இரண்டு வெளி வந்தது போலக் கருதப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன. ஆனால், அக்காலத்தில் வெளிவந்த பதிப்பு ஒன்றே ஒன்றுதான். அப் பதிப்பு, திரிசிரபுரம் சுப்பராய செட்டியாரால் பதிக்கப்பெற்று, பூவிருந்தவல்லி கன்னியப்ப முதலியாரால் அச்சிடப் பெற்றிருக்கிறது. ஓரே பதிப்பு, இருவரது கூட்டு முயற்சியால் வெளியாகி யிருக்கிறது.

க. ப. அறவாணன்
கட்டுரையாசிரியன்

# ''வாய், பல் மருத்துவம்''
# நூல் வெளியீட்டு விழா

கடந்த 30—9—72இல் சென்னை மருத்துவக் கல்லூரி மாமண்டபத்தில் முதல்வர் டாக்டர் எம். நடராசன் அவர்கள் தலைமை தாங்க, தமிழ்நாடு நலத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ''வாய், பல் மருத்துவம்'' எனும் நூலை வெளியிட்டார்கள். விழா நிகழ்ச்சிகளின் சுருக்கம் வருமாறு :

**வரவேற்புரை**

• கழக ஆட்சியாளர் திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கள் நிகழ்த்திய வரவேற்புரைச் சுருக்கம் :


தமிழ்ப் பெருமக்களே,

இன்று இங்கே சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் **1457** ஆவது வெளியீடாகிய 'வாய், பல் மருத்துவம்' என்னும் நூல் வெளியிடப் பெறுகின்றது.

இம் மருத்துவக் கல்லூரி முதல்வரும் தமிழ் அறிஞருமாகிய டாக்டர் எம். நடராசன் அவர்கள் இவ் விழாவிற்குத் தலைமை தாங்குவது மிகப் பொருத்தமாகும் என்பதை உள்ளப் பூரிப்போடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அடுத்துச் சிறப்புரையாற்றத் தமிழ்நாடு நலத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்கள் எழுந்தருளியிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இவ்விருவரும், நலத்துறை இயக்குநர் டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன் அவர்களும் இந்நூலுக்குப் பாராட்டுரை வழங்கியுள்ளார்கள். ஆகவே இந்நூலின் பெருமையை யான் எடுத்துச் சொல்வது மிகையாகும்.

கழகம் எத்தனையோ நூல்களை வெளியிட்டிருப்பினும் இந்த மருத்துவ நூலை வெளியிடுவதை யான் பெரும்பேருகக் கருதுகிறேன். அதிலும் யான் பல் சீர்கேட்டினுல் பெருந் துன்பமுற்றிருக்கிறேன். இன்றும் செயற்கைப் பல்லோடு பேசுகின்றேன். ஆகையினுல் இப்படிப்பட்டதொரு நூல், கழகவழி வெளிவருவதைப் பெருமையாகக் கருதுபவர்கள் என்னைவிட யாரும் இருக்கமாட்டார்கள்.


# ‘வாய், பல் மருத்துவம்’
## வெளியீட்டு விழா
## (30 - 9 - ’72)




மருத்துவக் கல்லூரி மாணவிகள் இறை வணக்கஞ் செலுத்துதல்



மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் நூலைப் பாராட்டிப் பேசுதல்



முதல் படியினை டாக்டர் லலிதா
காமேசுவரன் அவர்கள் பெற்றுக் கொள்ளுதல்



மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
நூலாசிரியர்கட்குப் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தல்

அடுத்து இந்நூலை எழுதியவர்கள் நால்வர். நால்வரும் டாக்டர்கள். இந்த நால்வரில் தலைமையாக இருப்பவர் டாக்டர் கண்ணப்பர். அவர்கள் இப்படிப்பட்டதொரு நூலைக் கொண்டுவர வேண்டுமென்று கூறியவுடன் அதனை யான் மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன். டாக்டர் கண்ணப்பரின் அன்பில் இணைந்திருந்து அவருடைய மாணவர்களாகிய மூவரும் சேர்ந்து இதனை ஆக்கியுள்ளார்கள். இந்த நூலின் ஆசிரியர்கள் நால்வராக அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பு.

தமிழ் ஆட்சி வந்து ஆறு ஏழு ஆண்டுகள் ஆகின்றன. தொடக்க காலத்திலேயே மருத்துவ நூல்களெல்லாம் தமிழில் வரவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்ட போதிலும் இவ்வளவு நாள் கழித்துத்தான் இப்படிப்பட்ட நூல் வெளிவருகின்றது.

1872 ஆம் ஆண்டில் மேலை நாட்டிலிருந்து இங்கு வந்து தமிழைப் படித்துத் தமிழிலேயே உடற் கூற்று (Human anotamy) நூலை வெளியிட்டிருக்கிறார்கள். 1867 ஆம் ஆண்டில் அறுவை மருத்துவ நூலையும் பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். வைத்தியர் கைவாகடம் என்ற நூல் தமிழில் வெளி வந்துள்ளது. அவையெல்லாம் இங்குக் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

காவல்துறை துப்பு ஆய்வாளராக இருந்த திரு. தி. வி. சாம்பசிவம் பிள்ளை தமிழில் மருத்துவ அகராதி ஒன்று தொகுக்கக் கருதித் தமிழ்—ஆங்கில மருத்துவ அகராதியினை 2 தொகுதிகளாக ஆக்கியுள்ளார்கள். 1963இல் அவற்றைக் காணும் வாய்ப்பினைப் பெற்றேன். தமிழ் மருத்துவத்தில் பல நூல்கள் இருந்து அழிந்து போயின. இந்திய மருத்துவம் ஆக்கம்பெற நம் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்கள் என்ற நம்பிக்கையுடையேன்.

இந்நூல் வெளியீட்டிற்கான செலவு, அடக்க விலை ஆகிய வற்றை நோக்கும்போது இதன் விலை கூடுதலான விலை என்று ஆகாது. இங்கு வந்திருப்பவர்கட்கு 7 ரூபாய்க்கு வழங்கப் படுகிறது.

இந்நூலை வெளியிடுவதில் பல தொல்லைகள். கழக ஓவியர் டாக்டர் கண்ணப்பரிடம் 30 முறைக்கு மேல் சென்றிருப்பார். டாக்டர் கண்ணப்பர் 30 முறைக்கு மேல் கழகத்திற்கு வந்திருப் பார்கள். அல்லாமல் கழக மேலாளர் என் மருகர் திரு. கலியாண சுந்தரம் இதற்காக ஏறத்தாழ ஒரு திங்கள் முழுமையும் வேலை

செய்திருப்பார். அதற்கு நான் கணக்கு வைத்திருப்பதனால் திட்டமாகத் தெரிவிக்கிறேன். இல்லாவிட்டால் இந்நூல் இவ்வளவு சிறப்பாக வெளிவந்திருக்காது. எந்த நூலையும் நான் இரண்டுமுறை பிழை திருத்தம் பார்ப்பதுண்டு. 75 அகவை நிரம்பியுள்ள நான் இப்படிப்பட்ட நூல்களை வெளி யிடுவதினாற்றான் மகிழ்ச்சியுடன் பணியாற்றுகிறேன்.

சென்னையிலே மறைமலையடிகள் நூல் நிலையம், பல்லவ புரத்தில் மறைமலையடிகள் கலை மன்றம், நெல்லையில் சிவஞான முனிவர் நூல் நிலையம், குழந்தைப்பள்ளி ஆகியவற்றை நடத்தி வருகிறோம். கழகப் புத்தக விற்பனை குறைந்திருப்பதால் இந்நிலையங்களை எப்படி நடத்துவது என்பது பற்றி அரசாங்கத் திற்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறோம். அரசு உதவி செய்யு மானால் எங்கள் பணி முட்டின்றிச் சிறப்பாக நடைபெறும் என்னும் நம்பிக்கையுடையேன்.

அடுத்து இவ்விழாவைச் சிறப்பாக நடத்தித் தருமாறு டாக்டர் நடராசன் அவர்களையும் சிறப்புரையாற்றி, ஆசிரியர் கட்குப் பொன்னாடை போர்த்துமாறு அமைச்சர் அவர்களையும் அன்போடு வேண்டிக் கொள்ளுகிறேன். இங்குப் பேச வந்திருப்பவர்கள் சிறப்பாகப் பேசுவார்கள். உங்கள் வாழ்த்து தலோடு இவ்விழாவைத் தொடங்குமாறு மதிப்புமிக்க முதல்வர் டாக்டர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**தலைமையுரை**

டாக்டர் எம். நடராசன் அவர்கள் ஆற்றிய தலைமையுரைச் சுருக்கம் :

இந்த விழாவானது மருத்துவக் கல்லூரியின் 138 ஆண்டு சரித்திரத்தில் மிக உன்னதான இடம் பெற வேண்டிய நாளாகும். சென்னை மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த மருத்துவத் துறையின் ஒரு பகுதிபற்றித் தமிழிலே ஒரு நூல் மருத்துவப் பேராசிரியர் நால்வரால் எழுதப்பட்டு அது இந்தக் கல்லூரியில் வெளிப்படுவதானால் அது சரித்திரத்தில் இடம் பெற வேண்டியதாகும். அந்த வகையில் இந்த நாளை எண்ணிப் பெருமை அடைகிறேன்.

மாண்புமிக்க பேராசிரியர் அன்பழகன் அவர்கள் தமிழில் பேசவும் விளக்கவும் ஆற்றல் வாய்ந்தவர். அப்படிப்பட்டவரால் இந்த விழாச் சிறப்படைவது இரட்டிப்பு வாய்ப்பாகும்.

தமிழில் எனக்கு ஆர்வம் உண்டு. ஆனால், தமிழுக்குச் சேவை செய்ய ஆற்றல் உள்ளவர்கள் மிகுதியாகத் தேவை. நான் மருத்துவக் கல்லூரிக்கு வந்த பிறகு தமிழில் படிக்கவோ எழுதவோ வாய்ப்புக் கிடையாது. நவீன ஆராய்ச்சியின் விளைவுகளை மக்களுக்குத் தெரியப்படுத்துவதில் எனக்கு ஆர்வம் மட்டும் உண்டு. ஆனால் ஆற்றல் இல்லை. இத்துறையில் உண்மையான பணிபுரியும் தமிழ் ஆர்வமுடைய திரு சுப்பையா போன்ற பெரியோர்கள் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் நவீன ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டு மக்களுக்கு நலம்புரிய வேண்டுமென்று விரும்புகிறேன். அவர்களுடைய ஆர்வத்தாலும் உழைப்பாலும் பல இடையூறுகளுக்கிடையே இவ்வளவு தமிழ்ப் புத்தகங்களை வெளியிட்டிருப்பது எனக்கே வியப்பாக இருக்கிறது.

தமிழில் முடியுமா என்ற காலம் போய்விட்டது. அந்தக் கேள்விக்கு இனி இடமே கிடையாது. தமிழில் எப்படிச் செய்வது—எவ்வளவு செய்வது—எப்போது செய்து முடிப்பது என்பதே இப்போதுள்ள கேள்வி. அதற்கு ஆர்வம் வேண்டும், மக்களின் ஒத்துழைப்பு வேண்டும், அரசின் ஒத்துழைப்பு வேண்டும்.

தமிழில் மருத்துவ நூல் வெளிவர வேண்டுமானால் அரசு பேராதரவு செய்து பணவுதவி செய்து அதனைப் பலரும் மலிவான விலையில் பெற்றுப் படிக்குமாறு செய்யவேண்டும். இல்லையேல் இன்னும் 5 ஆண்டில் செய்ய வேண்டியதை 25 ஆண்டு செய்யவேண்டியிருக்கும். நமது கல்லூரியில் ஆர்வமும் ஆற்றலும் உள்ள பேராசிரியர்கள், உதவி ஆசிரியர்கள், உள்துறை மருத்துவர்கள், மாணவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஊக்கமூட்ட வேண்டும். அவர்களைப் பயன்படுத்தத் திட்டமிட்டு அரசும் அதற்கு உதவி செய்தால் தமிழில் பல புத்தகங்கள் வெளிவரக்கூடும்.

## சிறப்புரை

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய சிறப்புரைச் சுருக்கம் :

பல் மருத்துவத் துறையில் தகுதிபெற்ற டாக்டர் கண்ணப்பன் அவர்களும் அவர் நண்பர்களும் இயற்றிய 'வாய், பல் மருத்துவம்' என்னும் நூலை வெளியிடும் வாய்ப்பினை

வழங்கியதற்காக உளமார்ந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நூலாசிரியர்களின் நல்ல முயற்சி உயர்திரு சுப்பையா அவர்களுடைய பேராதரவோடும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் பணியாற்றுகிற பலருடைய ஒத்துழைப்போடும் ஒரு சிறந்த நூல் வடிவு பெற்றுத் தமிழில் நல்ல மருத்துவ நூல் இல்லை என்கிற குறையைப் போக்குகிற ஒரு நன்முயற்சியாக இற்றை நாள் வெளிப்பட்டிருக்கிறது.

தமிழ் நூல்கள் வெளியிடுவதில் உள்ள இடர்ப்பாடுகள் நீங்கவேண்டுமானல், தமிழ்ப் பற்றுடைய பெருமக்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

டாக்டர் நடராசன் போன்ற உலகறிந்த முடநீக்கியல் துறை நிபுணர்கள் தமிழ் வளர்ச்சியில் ஈடுபடுவார்களானல் முட நீக்கியலால் எப்படி உடல் முடம் நீக்கப்படுகிறதோ அப்படித் தமிழ் வளர்ச்சித் துறையிலும் முடம் நீக்கப்படும் என்று உறுதியாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நலத்துறைத் தலைவர்களும், அத் துறையில் வளருகிற கட்டத்தில் உள்ளவர்களும், வளருகிறவர்களும் தமிழ் வளர்ச்சிக்கான பணிகளை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழக அரசு வெளியிடுதற்குத் தமிழில் மருத்துவ நூல்கள் கிடைக்கவில்லை. அல்லது நூல்களை இயற்றுகிற ஆர்வமுள்ளவர்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே பல்வேறு நிபுணர்கள் வழி காட்ட முன்வருவார்களானல் தமிழ் வளர்ச்சித் துறை திட்டமாக அத்துறையில் பணியாற்ற முடியுமென்று நம்புகிறேன்.

அடுத்து, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிடும் நூல்கள் வரவேற்கப்பட வேண்டும் என்பதில் கருத்துச் செலுத்துகிறேன். கல்வித் துறை அமைச்சர் மூலம்தான் அதற்கு ஆவன செய்யவேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை நூலின் விலை மலிவாக்கப் பட்டுவிட்டால் அது நிறைய விற்றுவிடும் என்ற ஒரு கருத்தைச் சொன்னபோது குறைந்த அளவு கட்டணம் வாங்கும் டாக்டர் களுக்கு நாட்டிலே மதிப்பில்லை என்பதை நான் டாக்டர் நடராசன் அவர்களிடம் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை.

சில நூல்கள் விலை மலிவாக இருந்தால் அந்த நூல்கள் மதிப்புடையன அல்ல என்னும் எண்ணம் தமிழ்நாட்டில் ஏற்படும். திருக்குறள், திருவாசகம் போன்ற நூல்களைத்தான் விலை குறைவாக இருந்தால் ஏற்றுக் கொள்வார்கள். விலை கூட அல்ல தடை; தமிழில் உள்ள நூல்கள் கருத்தில் சிறந்து தானிருக்கும் என்ற நம்பிக்கை இன்னும் தமிழ் மக்களுக்கு ஏற்படவில்லை.

அரசியல் துறையில் புதுக் கருத்துக்களை வெளியிடுவது போல் விஞ்ஞானத்தில், மருத்துவத் துறையில் தாய்மொழி இடம் பெருததால் புதிய சிந்தனைகள் வளர்வதற்கு ஒரு வகையில் தடையாகத்தான் இருக்கிறது.

இந்நூலாசிரியர்கள் திறமையோடு இந்நூலை இயற்றியுள்ளார்கள். நூலாக்கத் துறையில் இந்த நூல் எந்த ஆங்கில நூலுக்கும் குறைந்ததன்று எனலாம். தமிழ் நடை தெளிவாக அமைந்துள்ளது. பல் மருத்துவம் மிகச் சிறந்த முறையில் தமிழில் உருப்பெற்றிருக்கிறது. இதை அடிப்படையாக வைத்து இன்னும் பல நூல்கள் வெளிவர முடியும். இந்நூல் வெளியிடுவதில் ஆர்வம் கொண்ட ஆசிரியர்களுக்கும், வெளிவருதற்குப் பெருமுயற்சி எடுத்துக்கொண்ட சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கும், உயர்திரு சுப்பையா அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**பொன்னுடை போர்த்தல் :**

மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்கள் நூலாசிரியர்களாகிய டாக்டர் கண்ணப்பர், டாக்டர் வீரையன், டாக்டர் புட்பராசு, டாக்டர் இராசகோபால் ஆகியோருக்கு முறையே பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தார்.

**பாராட்டுரைகள் :**

**திரு. வே. தில்லைநாயகம்**

பொது நூலகத்துறை இயக்குநர் திரு. வே. தில்லைநாயகம் அவர்கள் பாராட்டுரை வழங்கினர். அவர் பேசுகையில், இது எங்குந் தமிழ், எதிலும் தமிழ் என்பதைச் செயலாற்றுங்காலம் என்றும், தமிழை முதல் நிலையிலே நிற்க வைக்கப் பாடுபட்டு வரும் அரசு இருக்குங் காலம் என்றும் கூறினர். 1968 ஆம் ஆண்டில் இந்தியாவில் வெளியிடப் பெற்ற ஆங்கிலம், இந்தி, மராத்தி-தமிழ் ஆகிய மொழி நூல்களில் தமிழ் இறுதி இடத்தைப்

பெற்றது என்று வருத்தத்தோடு குறிப்பிட்டார். நூலாசிரியர்களையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தையும் பெரிதும் பாராட்டினுர்.

அடுத்துப் பல் மருத்துவம் பயிலும் மாணவர்கள் கௌதமன், சுப்பிரமணியம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

**திருவாட்டி பேராசிரியர் டாக்டர் லலிதாகாமேசுவரன்:**

திருவாட்டி லலிதாகாமேசுவரன் அவர்கள் பேசுகையில், கழக ஆட்சிப் பொறுப்பாளர் அவர்களைத் தம் தந்தையார் (நாவலர் சோமசுந்தரபாரதியார்) காலம் முதல் அறிந்திருப்பதாகவும், அவர்தம் தமிழ்ப்பணியினைப் பாராட்டியும் பேசினர். அவர்கள் மேலும் பேசுகையில் மருத்துவத்துறையில் ஆங்கிலச்சொற்களுக்கு நேர் தமிழ்ச்சொற்களை உருவாக்குவது மிகவும் கடினம் என்ருர். நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களை முட்டாள்களாக வைத்திருக்கிறேம் என்றும் அதே நேரத்தில் மேலை நாடுகளில் எளிய படிப்பு படித்தவர்களும் தாய்மொழிமூலம் கல்லூரிப் படிப்பைப் பெற்று தொழில்நுட்ப (Engineers) வல்லுநர்களாக விளங்குகிருர்கள் என்றும் குறிப்பிட்டார்.


**நன்றியுரை:**

டாக்டர் கண்ணப்பர் அவர்கள், இந்நூலை இயற்றத் தமக்கு உறுதுணைநின்ற டாக்டர்களுக்கும், சிறந்த முறையில் நூலினை வெளியிட்ட கழகத்தார்க்கும் தம் நன்றியினைத் தெரிவித்தார்.

**வாழ்த்துக்கள் :**

கீழ்க்காணும் பெருமக்களிடமிருந்து விழாச் சிறப்புற வாழ்த்திக் கடிதங்கள் வந்துள்ளன: புலவர் இரா. இளங்குமரன், மதுரை; புலவர் ப. தமிழ்மணி, கருவூர்; பேராசிரியர் சுந்தரசண்முகனுர், புதுவை; புலவர் ஆ. பழநி, காரைக்குடி; 'அஞ்சுகம்' ஆசிரியர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி, புலவர் மி. மு. சின்னுண்டார், அம்மாப் பேட்டை, சேலம்; கவிஞர் இரா. வீரன், பி. ஓ. எல்., தென்கீரனூர்; இரா. பெரிய நாயகம், மதுரை; பண்டித வித்துவான் கு. சுந்தரமூர்த்தி, திருப்பனந்தாள்; கோ. வே. பெருமாள் எம். ஏ., பி.டி., நெல்லை; செ.வரதராசன், தமிழாசிரியர், கள்ளக் குறிச்சி.

# தணிகைமணி
# டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளை
# முதலாண்டு நினைவு விழா (12-9-'72)



டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் 'தணிகைமணி' வரலாற்று நூலை வெளியிட்டு
டாக்டர் வி. மா ஞானப்பிரகாச அடிகளிடம் வழங்குதல்



விழாவிற் கலந்துகொண்ட பெருமக்களும்
தணிகைமணி குடும்பத்தினரும்

# தணிகைமணி, டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளை முதலாண்டு நினைவு விழா

தேவார, திருவாசக முதலிய திருமுறைகளுக்கு ஒளிநெறி, ஒளிநெறிக் கட்டுரை வகுத்துத்தந்த தணிகைமணி டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்களின் முதலாண்டு நினைவு விழா 12-9-72 செவ்வாய்க்கிழமை யன்று மாலை சென்னை, மறைமலையடிகள் நூல் நிலையத்திலமைந்துள்ள வள்ளலார் திருவருள் மண்டபத்தில் நடைபெற்றது. விழாவிற்குத் தருமையாதீனப் பிரசார நிலையத் தலைவர் **தவத்திரு மகாலிங்கத் தம்பிரான்** அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுக் கழக ஆட்சியாளர் **தாமரைச் செல்வர் திரு வ. சுப்பையா பிள்ளை** அவர்கள் பேசுகையில் தணிகைமணி யவர்களின் தமிழ்த் தொண்டைப் பாராட்டிப் பேசினார்கள். ''தணிகைமணி யவர்கள் தேவாரத் திருமுறைகளுக்கு மேனாட்டு முறையைப்போல் ஒளிநெறியும், ஒளிநெறிக் கட்டுரைகளும் எழுதியிராவிடில் தமிழகத்தில் வேறு யாருமே இப்பணியைச் செய்திருக்க முடியாது. பல்கலைக் கழகத்தில் பல பேரறிஞர்கள் கூடிச் செய்ய வேண்டிய ஒரு பணியை அவர்கள் ஒருவரே முன்னின்று முடித்துத் தந்தார்கள். அதை எழுதி முதலில் ஒரு தொகுதி வெளியிட்ட பின்னர் மேற் கொண்டு வெளியிட அவர்கள் தயங்கியிருந்த காலத்தில் நான் முன் சென்று 'கழகம் இதனை வெளியிடும்; நீங்கள் தொடர்ந்து பிற திருமுறைகளுக்கும் ஒளிநெறி வகுத்துத்தர வேண்டும்' என்று கேட்டுக் கொள்ள அவர்களும் ஒன்பது திருமுறை களுக்கு ஒளிநெறியும் ஒளிநெறிக் கட்டுரையும் வகுத்துத் தந்தார்கள். கழகமும் அதனை வெளியிட்டுள்ளது. இவ்வளவு செயற்கரிய செயலைச் செய்த தணிகைமணி யவர்களுக்கு 'டாக்டர்' பட்டம் வழங்க வேண்டுமென்று நான் கல்வியமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் கூறியபோது அவர்களும் மதுரைப் பல்கலைக் கழகம்வழி அப்பட்டத்தை வழங்கச் செய்தார்கள். அவர்கள் வழியில் நின்று பின் மூன்று திருமுறைகளுக்கும் ஒளிநெறி வகுப்பதே நாம் அவர்களுக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும்.''

தணிகைமணி யவர்களின் திருவுருவப் படத்தைத் **தவத்திரு மகாலிங்கத் தம்பிரான்** அவர்கள் திறந்து வைத்துத் தலைமையுரை நிகழ்த்தினார்கள். ''தணிகைமணி அவர்களின் வரலாற்று நூலில் கொடுக்கப்பட்டுள்ள சாதகக் குறிப்பைப் பார்த்த வுடனேயே அவர்கள் பேரறிஞராகப் பெருவாழ்வு வாழ்ந்திருப் பார்கள் என்று சொன்னேன். அவ்வாறே அவர் வரலாறு முழுவதையும் படித்தபின் அவர்கள் சிறந்த அறிஞராக,

தணிகை முருகனிடம் தணியாத பக்தியுடையவர்களாகத் திகழ்ந்ததை யறிந்து மகிழ்ச்சி யடைந்தேன்'' என்று அவர்கள் கூறினார்கள். மேலும் தவத்திரு அடிகளாரவர்கள் 'தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்ற குறளுக்குச் சைவசித்தாந்தக் கருத்துக்களோடு விளக்கத்தை நல்கி தணிகைமணி யவர்களுடைய வாழ்க்கை எவ்வாறு முற்பிறவியில் செய்த ஊழ் வினையின் காரணமாக அமைந்த ஒன்று; அஃது இந்தப் பிறவியில் எவ்வாறு பெற்றோர் மூலமாக வளர்ந்தது என்றெல்லாம் விளக்கமாகக் கூறினார்கள்.

'தணிகைமணி டாக்டர். வ. சு. செங்கல்வராய பிள்ளை' என்ற தணிகைமணி யவர்களின் வரலாற்று நூலைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ந. சஞ்சீவி, எம் ஏ., எம்.லிட்., பி.எச்.டி. அவர்கள் இலயோலா கல்லூரி டாக்டர் வி எம். ஞானப்பிரகாசம் அவர்களிடம் வழங்கித் தணிகைமணி யவர்களின் தமிழ்ப் பணியைப் பாராட்டிப் பேசினார்கள். 'இந்த விழாவில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் என்ற பொறுப்பில் கலந்து கொண்டு பேசுகின்றேன். ஏறத்தாழ 1450 நூல்களை வெளியிட்டுள்ள கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டு அண்மையில் 75 அகவை நிரம்பவிருக்கும் அவர்களையும் பாராட்ட வேண்டுமென்றே இவ் விழாவில் பேச ஒத்துக் கொண்டேன். கழக ஆட்சியாளர் அவர்கள் வரவேற்புரையில் எவ்வாறு தாம் பெருமுயற்சி யெடுத்துத் தணிகைமணி யவர்கட்கு 'டாக்டர்' பட்டம் வாங்கிக் கொடுத்தார்கள் என்பதை விளக்கிக் கூறினார்கள். இதைப் போலப் பல அரிய தொண்டுகளை நிறைவேற்றிவரும் அவர்களுக் கல்லவா நாம் 'டாக்டர்' பட்டம் வாங்கித் தருதல் வேண்டும்? அதைவிட நாம் அனைவரும் கழக வெளியீடுகளைப் பெருமளவில் வாங்கிப் படித்தாலே போதும்; ஆட்சியாளர் அவர்கள் மிகமிக மகிழ்ச்சி யடைவார்கள். அந்த அளவுக்கு அவர்கள் மிக அருமையான நூல்களை வெளியிட்டு வருகின்றார்கள்.

தணிகைமணி யவர்களைப் பற்றிய வரலாற்று நூலை நான் வெளியிட்டேன். அதில் பல செய்திகள் சுவையாகவும் கோவையாகவும் கொடுக்கப்பட்டுள்ளன. காட்டாக ஒரே ஒரு செய்தியை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தணிகைமணி யவர்கள் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களை அடிக்கடி வீட்டுக்குச் சென்று காண்பதுண்டாம். ஐயரவர்களும் தணிகைமணி யவர்களின் வீட்டிற்கு வருவதுண்டாம். ஒருமுறை ஐயரவர்கள் நோயுற்றிருந்தபோது

தணிகைமணி யவர்கள் ஐயரவர்களின் வீட்டிற்குச் சென்று அவர் அருகில் சென்று நின்றாராம். ஐயரவர்கள் மகிழ்ச்சியோடு திருப்புகழ் ஆராய்ச்சி செய்த கையாயிற்றே என்று இவரின் இருகைகளையும் பிடித்துத் தம் கண்களில் ஒத்திக் கொண்டாராம். உடனே தணிகைமணி ஐயரவர்கள் அடிகளைப் பற்றிச் சங்கத் தமிழ் நூல் ஏடுகளைத் தேடின கால்களாயிற்றே இவை என்று கூறி வணங்கினாராம். இதுவல்லவா சிறந்த தமிழ்ப் பண்பு.

தணிகைமணியவர்கள் தமிழிலும் சைவத்திலும் சிறந்து விளங்கினார்கள். இப்போதுள்ள தமிழ்ப்புலவர்கள் சைவசமயத்தில் ஈடுபாடுகாட்டுவதில்லை. தமிழ்ப்புலவர்கள் சைவசித்தாந்தம் படிக்கவேண்டும். அவர்கள் அவ்வாறு படிப்பதற்குச் சைவ மடங்கள் பொருளுதவி செய்யவேண்டும். அத்தகைய செயலைச் செய்தால் தணிகைமணியை நாம் நினைவு கூர்ந்தவர்களாவோம். சுப்பையாபிள்ளை அவர்கள் இன்னும் பல தணிகைமணிகளை உருவாக்க வேண்டும். அல்லது இருப்பவர்களைத் தணிகைமணிகளாக மாற்றி அவர்களுக்கு டாக்டர் பட்டங்கள் வாங்கிக் கொடுக்க வேண்டும்.

‘திருக்கோயில்’ ஆசிரியர் **திரு. ந. ரா. முருகவேள், எம். ஏ. எம். ஓ. எல்.** அவர்கள் தணிகைமணியவர்களைப் பாராட்டிப் பேசினார்கள். ‘‘தணிகைமணி திருமுறையிலேயே தோய்ந்தவர். மனிதர்களில் தலையாய மனிதராக, சான்றோராக இலங்கியவர். ஆன்றவிந்தடங்கிய பண்பாளர்.

ஏறத்தாழ 18 ஆண்டுகட்குமுன் தணிகையில் தணிகைமணி அவர்கள் தலைமையின்கீழ் நான் ‘தமிழ் ஞானசம்பந்தன்’ என்ற தலைப்பில் பேசினேன். பின் அவர்கள் வேண்டுகோட்கிணங்க அதைச் சிறுநூல் வடிவில் அவர்களிடம் எழுதிக் காட்டினேன். அதற்கு அவர்கள் பாராட்டுரையும் பகன்றார்கள்.

தணிகைமணி அவர்கள் வாழ்க்கையில் முற்பகுதி வாழ்க்கையை விடப் பிற்பகுதி வாழ்க்கைதான் சிறப்பான வாழ்க்கை. அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர்த்தான் வாழ்க்கை மிகமிகச் சிறந்து விளங்கியிருக்கிறது. பொறிபுலன்கள் வேறு வழிகளில் போக வொட்டாது தடுப்பதற்கே தாம் திருப்புகழுக்கு உரையெழுதத் தொடங்கியதாகத் தணிகைமணி கூறுவார்.

இந்த நூற்றாண்டில் சிறந்து விளங்கிய இருபெரு மணிகளில் ஒருவர் தணிகைமணி. மற்றொருவர் சிவக்கவிமணி.

திருப்புகழைப் பன்னிரண்டு திருமுறைகளாக வகுத்து உரையெழுதியுள்ளார்கள். அதன் ஒவ்வொரு நூலுக்குமே ஒவ்வொரு டாக்டர் பட்டம் கொடுக்கலாம். அவர்கள் திருப்புகழ் மட்டும் படித்திருந்தார் என்பதன்று, சங்க நூல்களையும்

காப்பியங்கள், புராணங்கள், பிரபந்தங்கள் போன்ற பல நூல்களையும் கற்று அவற்றை உரையில் மேற்கோள்களாகக் காட்டியுள்ளார். அத்தகைய சிறந்த சான்றோரை இத்தலை முறையிற் காணமுடியாது. பல இலக்கண நுணுக்கங்களை அவர் உரையில் எடுத்துக் காட்டியுள்ளார்.''

சென்னை பச்சையப்பன் மகளிர் கல்லூரி முதல்வர் **திருவாட்டி இந்திரா சோமசுந்தரம்**, எம்.ஏ., எம். லிட்., பி.எஸ்.ஸி, பி. டி. அவர்கள் தணிகைமணியின் பல்துறைப் பணிகளைப் பாராட்டிப் பேசுகையில் 'எனக்குப் பெரும் வழிகாட்டியாக தோன்றாத்துணையாக இருந்து உதவியவர்கள் தணிகை மணியவர்கள். என் 'டாக்டர்' பட்ட ஆராய்ச்சி திருவாசகத்தைப் பற்றியதாகும். இப்பெரிய ஆராய்ச்சியைத் தோன்றாத்துணையாக இருந்து தணிகைமணியவர்கள் முற்று முடிந்த அளவிலே செய்து வைத்துள்ளார்கள். எனக்குமட்டுமன்று; என்போன்ற ஆராய்ச்சி மாணவர்கள் அனைவருக்கும் அவர் நூல்கள் பயன் படுவனவாகும்.

டாக்டர் தணிகைமணியவர்களைப் பல முறை சென்று பார்த் திருக்கிறேன். அவர்கள் வீட்டில் அவர்களைச் சுற்றிப் புத்தகங்கள் தாம் இருக்கும். அதற்கு நடுவில் பழுத்த சிவஞானி போல் தொண்டையே தம் கடமையாகக்கொண்டு கூனிக் குறுகிய தோற்றத்தோடு அவர்கள் படித்துக்கொண்டிருப்பார்கள். நாம் நல்ல நிலையிலே இருக்கும்போதுகூட ஒன்றும் பயனுள்ள பணியைச் செய்வதில்லை. ஆனால் அவர்களோ பொறிகள், புலன்கள் தளர்ந்த நிலையிலேகூட இறை பணியைச் செய்திருக் கின்றார்கள். அவர்களை நினைக்கும்போது டாக்டர் ஜி. யு. போப் அவர்களின் திருவாசக முன்னுரையில் குறிக்கப்பட்டுள்ள ஒரு கருத்தே என் நினைவுக்கு வருகின்றது. 'To have a great work in progress is the way to live long.' தணிகைமணியவர் களும் ஒரு சிறந்த பணியை மேற்கொண்டிருந்ததால் தான் அப்பணியே அவர்களது ஆயுளை வளர்க்கும் அருமருந்தாக அமைந்தது' என்று குறிப்பிட்டார்கள்.

இறுதியாகத் தணிகைமணியவர்களின் தம்பி மகனும் சென்னைப் பல்கலைக்கழகத் தத்துவப் பேராசிரியருமான **டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி**, எம்.ஏ., பிஎச்.டி. அவர்கள் விழாவில் கலந்துகொண்ட பெருமக்களுக்கும் விழாஅமைப்பில் பேருதவி செய்த கழக ஆட்சியாளர் அவர்கட்கும் நன்றி நவின்றார். தணிகைமணியவர்களின் நூல்களும் கையெழுத்துப்படிகளும் படங்களும் கொண்ட காட்சியொன்று விழாமண்டபத்தில் அமைக்கப் பெற்றிருந்தது.

# தமிழ் ஒலிகளின் மிகையளவும் செயற்றிறனும்

[டாக்டர் கி. கருணாகரன், எம்.ஏ., பிஎச்.டி.,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

**நோக்கம் :** தமிழ் ஒலிகளின் மிகையளவுகளையும் (Redundancy Values) செயற்றிறனையும் (Functional load) அளவிட்டறிவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இவ்விரண்டு அளவீடுகளைக் கொண்டு தமிழ்மொழியின் இருவகை வழக்குகளின் **செய்திப் பரிமாற்றல் திறனை** (Communicative Efficiency) ஒப்புமை செய்து அறிவதும் இக் கட்டுரையின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும்.

இவ்விரு அளவுகளையும் கணக்கிட இரண்டாயிரம் சொற்கள் (Lexical Items) தமிழ் மொழியின் இருவகை வழக்குகளான **இலக்கியத் தமிழ், பேச்சுத் தமிழ்** ஆகியவைகளின் சில இலக்கியப் பகுதிகளில் இருந்து ஒவ்வொன்றிலும் சுமார் நானூறு சொற்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன அவை யாவன : 1. கதை, 2. நாவல், 3. செய்தி, 4. உரையாடல், 5. அறிவியற் பகுதி என்பனவாகும். இச் சொற்கள் முதலில் இலக்கியத் தமிழில் (Literary Tamil) பயன்படுத்தப் படும் ஒலியன்களைக் (Phonemes) கொண்டு எழுதப்பட்டு, பின் அவை பேச்சுத் தமிழில் (Spoken Tamil) பயன்படுத்தப்பட்டு வரும் ஒலியன்களைக் கொண்டு எழுதப்பட்டது.

**வழிமுறை :** கீழே கொடுக்கப்பட்டு மூன்று வழிகளில் சராசரி செய்தி அளவு (Amount of Information), உயர்மட்டச் செய்தி அளவு (Maximum Information), செய்தி அளவுகளின் விகிதம் (Relative Entropy), மிகையளவு (Redundancy) மற்றும் செயற்றிறன் (Functional load) போன்ற சில தனிப்பட்ட அளவீடுகள் கணக்கிடப்பட்டுள்ளன.

1. தமிழ்மொழியின், மேலே சொல்லப்பட்ட இருவகை வழக்குகளில் காணப்படும் ஒலியன்களின் **தனி வருகை எண்ணிக்கை** (Individual probability of occurrence) முறையைக் கொண்டு

அவை ஒவ்வொன்றும் வெளிக்கொணரும் செய்தியின் அளவைக் கணக்கிடுதல்.

2. இவ்விருவகை வழக்குகளில் பயன்பட்டு வரும் ஒலியன்கள் இரண்டிரண்டாகச் (Digram probability of occurrence) சேர்ந்து வரும்பொழுது அவை ஒவ்வொன்றும் வெளிக்கொணரும் செய்தியின் அளவைக் கணக்கிடுதல்.

3. தமிழ்மொழியின் இருவகை வழக்குகளில் உள்ள ஒலியன்கள் மூன்று மூன்ருகச் சேர்ந்து (Trigram probability of occurrence) வரும்பொழுது அவை ஒவ்வொன்றும் வெளிக் கொணரும் செய்தியின் அளவைக் கணக்கிடுதல்.

முதலில் ஒவ்வொரு தனிப்பட்ட ஒலியன், ஒலியன் சேர்க்கை (Phonemic Sequence) ஆகியவைகளின் தனி வருகை எண்ணிக்கையைக் கணக்கிடுதல் வேண்டும். இதைக் கொண்டு எல்லா ஒலியன்கள், அவற்றின் சேர்க்கைகள் ஆகியவற்றின் தனித்தனியான **மொத்த வருகை எண்ணிக்கையை** (Total number of occurrence) அறிந்து கொள்ள முடியும். இக் கணக்கீட்டைக் கொண்டு எல்லா ஒலியன்களுடைய **வருகை எண்ணிக்கை விகிதத்தை** (Probability of occurrence of phonemes) அளவிட முடிகிறது. ஒவ்வொரு குறிப்பிட்ட ஒலியனும் வெளிக் கொணரும் **செய்தியின்** (Information) அளவைக் கீழ்வரும் சூத்திரம் (Formula) கணக்கிட்டறிய உதவுகிறது.

**சூத்திரம் :** $செ_{(\quad)} = -லாக்_2\ வ.எ.வி_{(\quad)}$

இச் சூத்திரத்தில் $செ_{(\quad)}$ என்பது ஒரு குறிப்பிட்ட ஒலியன் ஒரு குறிப்பிட்ட இலக்கியப் பகுதியில் வரும்பொழுது அது வெளிக்கொணரும் செய்தியின் அளவைக் குறிக்கிறது. $வ.எ.வி_{(\quad)}$ என்பது ஒவ்வோர் ஒலியனுடைய வருகை எண்ணிக்கை விகிதத்தைக் காட்டுகிறது. இவ்வகைக் கணக் கீட்டில், $லாக்_2$ (logrithm to the base 2) என்பது $லாக்_{10}$ என மாற்றி எடுத்தாளப்படுகிறது.

மேலே கண்டுபிடிக்கப்பட்ட அளவுகளைக் கொண்டு **சராசரி செய்தி அளவு** (செ) என்பது அளவிடப்படுகிறது. இதனைக் கணக்கிட

$$\text{செ} = -\sum_{\text{செ}=1}^{n} \text{வ.எ.வி} (\quad) \text{ லாக் வ.எ.வி} (\quad)$$

என்ற சூத்திரம் உபயோகப்படுத்தப்படுகிறது. அடுத்து உயர் மட்டச் செய்தி அளவு ($\text{செ}_1$) என்பது

$$\text{செ}_1 = -n \text{ லாக் வ.எ.வி}$$

$$= n \text{ லாக் } \frac{1}{n}$$

என்ற சூத்திரத்தைக் கொண்டு அறியப்படுகிறது. சராசரி செய்தி அளவையும் (செ) உயர்மட்டச் செய்தி அளவையும் கொண்டு

(1) செய்தி அளவுகளின் விகிதம் (செ.வி) $= \dfrac{\text{செ}}{\text{செ}_1}$

(2) மிகை அளவு (மி.அ) $= (1 - \text{செ.வி})$

போன்ற இரு அளவீடுகளையும் கணக்கிடுகிறோம். இவ்வளவீடுகள் ஒவ்வொரு வகையான இலக்கியப் பகுதிக்கும் (தமிழ் மொழியின் இரு வகைகள்) **தனித்தனியாகவும்** (Individually) எல்லா வகையான இலக்கியப் பகுதிகளையும் ஒன்றுகச் சேர்த்து **மொத்தமாகவும்** (Totally) கணக்கிடப்படுகின்றன. இதேபோல் ஒவ்வொரு வகை இலக்கியப் பகுதியிலும பயன்படுத்தப் பட்டுள்ள ஒலியன்களின் தனித்தனி வருகை எண்ணிக்கையையும், அவற்றின் மொத்த வருகை எண்ணிக்கையையும் கணக்கிடுகின்றோம்.

தனி ஒலியன்களின் வருகை எண்ணிக்கை அளவுகளின் மூலம் கணக்கிடப்பட்ட **மிகை அளவுகளை** ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் இலக்கியத் தமிழ், பேச்சுத் தமிழ் ஆகிய இருவகைகளின் செய்திப் பரிமாற்றல் திறனை (Relative Efficiency) நாம் எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. தமிழ்மொழியின் இருவகைகளுக்கும் தனித்தனியாகக் கணக்கிடப்பட்ட சராசரி செய்தி அளவு, உயர்மட்டச் செய்தி அளவு, மிகை அளவு ஆகியவைகளைக் கீழுள்ள அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது.

அட்டவணை : 1

| இலக்கிய வகை | இலக்கியத் தமிழ் (இ.த) | | | | பேச்சுத் தமிழ் (பே த) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | செ | செ$_1$ | செ.வி | மி.அ | செ | செ$_1$ | செ.வி | மி.அ |
| நாவல் | 3·9 | 5·1 | 0·77 | 0·23 | 3·9 | 4·7 | 0·84 | 0·16 |
| செய்தி | 3·85 | 5·1 | 0·78 | 0·22 | 3·93 | 4·7 | 0 835 | 0·165 |
| உரையாடல் | 3·82 | 5·1 | 0·785 | 0·215 | 3·86 | 4·7 | 0·855 | 0·145 |
| கதை | 3·86 | 5·1 | 0·775 | 0·225 | 3·96 | 4·7 | 0 832 | 0·18 |
| அறிவியற் பகுதி | 3·99 | 5·1 | 0·75 | 0·24 | 3 89 | 4 7 | 0·86 | 0 14 |
| எல்லா வகைகளும் | 4.00 | 5·1 | 0·755 | 0·245 | 3·94 | 4·7 | 0·83 | 0·17 |

மிகை அளவுகளைக் கொண்டு திறன் ஒப்புமையைக் கணக்கிடும்பொழுது ஒரு பொதுவான விதி ஒன்றினை அனுசரிக்க வேண்டும்.

பொதுவாக 'மிகை அளவு அதிகரித்தால், ஒரு மொழியின் செய்திப் பரிமாற்றல் திறன் குறையும் ; ஆனால், மிகை அளவு குறைந்தால், அம்மொழியின் செய்திப் பரிமாற்றல் திறன் அதிகரிக்கும்' என்பது ஒரு வரையறுக்கப்பட்ட கொள்கையாகும். இக் கொள்கையின்படி நோக்கின் மிகை அளவும் (மி. அ.) செய்திப் பரிமாற்றல் திறனின் அடிப்படை அளவுகளான செய்தி அளவுகளின் விகிதம் (செ. வி.) ஆகிய இரண்டும் எதிர் விகிதத்தில் (Indirect Proportionality) அமைந்துள்ளன என்பது தெற்றென நமக்கு விளங்குகிறது. அஃதாவது,

$$\text{மி. அ} \propto \frac{1}{\text{செ. வி.}}$$

என்று இவ்விகிதத்தினைக் குறிக்கலாம்.

ஆனால் மிகை அளவுகள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் (Optimum Value) குறைந்து விட்டால், ஒரு மொழியின் செய்திப் பரிமாற்றல் திறன் மிகை குறைந்து விடும் என்பது ஒரு வரையறுக்கப்பட்ட கொள்கை யாகும். இதற்குக் காரணம் அம்

மொழியைப் புரிந்து கொள்ளும் நிலை குறைந்து விடுவதேயாகும். தனி ஒலியன்களின் வாயிலாக மிகை அளவுகள் இங்குக் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றைக் கொண்டு தமிழ் மொழியின் இருவகை களின் செ. ப. திறனைக் கண்டறிந்தது போலவே இரு ஒலியன் சேர்க்கை (Digram), மூவொலியன் சேர்க்கை (Trigram) ஆகியவற்றின் வாயிலாகவும் இவ்விருவகைகளின் மி. அளவு களையும் செய்திப் பரிமாற்றல் திறனையும் ஒப்பிட்டுக் காண முடியும்.

பேச்சுத் தமிழின் ஒவ்வோர் இலக்கியப் பகுதிக்கும் எல்லா இலக்கியப் பகுதிகளையும் ஒன்ருகச் சேர்த்தும் கணக்கிடப்பட்ட மிகை அளவுகள் பே. த. [0·16, 0·165, 0·145, 0·18, 0·14, 0·17] இலக்கியத் தமிழின் ஒவ்வொரு வகை இலக்கியப் பகுதிக்கும் எல்லா வகை இலக்கியப் பகுதிகளையும் ஒன்ருகச் சேர்த்தும் கணக்கிடப்பட்ட மிகை அளவுகளை இ. த. [0·23, 0·22, 0·215, 0·225, 0·24, 0· 245] விடக் குறைந்தே காணப் படுகிறது. இதற்கு முக்கியமாக இரு காரணங்களைச் சொல்ல முடியும். அவையாவன :

1. இலக்கியத் தமிழில் உள்ள சில ஈரொலியன், மூவொலியன் சேர்க்கைகள் பேச்சுத் தமிழில் அறவே காணப்பட வில்லை.

2. இலக்கியத் தமிழில் உள்ள ழ, ற, ஞ போன்ற சில ஒலியன்கள் பேச்சுத் தமிழின் பல வழக்குகளில் காணப்பட வில்லை.

**செயற்றிறன்** (Functional load)

செயற்றிறனைக் கணக்கிடும் பொழுது தமிழின் இருவகை களில் காணப்படும் பல்வேறு ஒலியன்களை எடுத்துக்கொண்டு ஒப்பிட்டு அறிதல் அவசியம். இவ்வாறு பேச்சுத் தமிழில் காணப்படும் ஒலியன்களையும் இலக்கியத் தமிழில் உள்ள ஒலியன் களையும் ஒப்பிடுகையில் இவை இரண்டும் குறிப்பாக லகர, நகர ஒலியன்களிலேயே வேறுபட்டு நிற்பதை அறிகிறோம். பேச்சுத் தமிழில் (பல கிளை மொழிகளில்) ழ, ற, ஞ போன்ற ஒலியன்கள் வருவதில்லை. ஆனால், இவை இலக்கியத் தமிழில் உள்ளன. ஆகவே பேச்சுத் தமிழில் இவ்வொலியன்கள் இல்லாத நிலை இவ்விரு வகைகளின் செயற்றிறனிலும் வேறுபாட்டை ஏற்படுத்துகிறது எனலாம். எடுத்துக் காட்டாக, பேச்சுத் தமிழில் ழ, ற, ஞ ஆகியவைகளின் செயலை ள, ர, (நன) போன்ற ஒலியன்கள் மேற்கொள்ளுகின்றன. இதனால் ள, ற, போன்ற ஒலியன்களுக்குச் செயற்றிறன் அதிகரிக்கிறது எனலாம்.

செயற்றிறனைக் கணக்கிடக் கீழே கொடுக்கப்பட்டுள்ள சூத்திரம் பயன்படுத்தப்படுகிறது.

$$செ. தி. = \frac{செ—செ_1}{செ}$$

இதில் **செ** என்பது சராசரி செய்தி அளவையும் **செ$_1$** என்பது உயர்மட்டச் செய்தி அளவையும் குறித்து நிற்கிறது. இவை இரண்டின் விகித அளவே **செயற்றிறன்** என்றும் சொல்லப்படு கிறது. செயற்றிறனைக் கணக்கிடுவதற்கும்—தனி ஒலியன், ஈரொலியன்—மூவொலியன் சேர்க்கைகள் போன்றவைகள் வெளிக் கொணரும் செய்தி அளவுகளையே அடிப்படையாக எடுத்தாளப்பட்டு வருகிறது எனலாம். இதன் வாயிலாகக் கணக்கிடப்பட்ட செ. தி. அளவுகள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை : 2**

| வரிசை எண் | இலக்கியவகை | செயற்றிறன் (தனிஒலியன்) | செயற்றிறன் (ஈரொலியன்) |
|---|---|---|---|
| 1 | நாவல் | 0·023 | 0·021 |
| 2 | செய்தி | 0·015 | 0·013 |
| 3 | உரையாடல் | 0 024 | 0·025 |
| 4 | கதை | 0·025 | 0·027 |
| 5 | அறிவியல் | 0·014 | 0·017 |
| 6 | எல்லா வகைகளும் | 0·021 | 0·022 |

**உதவிய நூல்கள் :**


1. G. A. Miller, (1951), *Language and communication*, New york, ch. 3 & 4.

2. C. F. Hockett, (1955), *A Manual of Phonology*, Indiana, pp. 215 - 17.

3. K. Karunakaran, (1972), 'Redundancy and functional load in Tamil', *ĀIUTTA - Nankavatu Karuttāraiku Malar*, Trivandrum, pp. 331 - 36.

# பார்ப்பனர் நிகழ்த்தும் கதைச் சொற்பொழிவுகளில் தமிழைப் பழிப்பது

[என். கே. வேலன்]

ஆத்திக சமாசத்தின் ஆதரவில் நடைபெறும் கதைகளிலும் சொற்பொழிவுகளிலும் வடமொழியில் பாடல்கள் பாடித் தமிழில் பொருள் கூறுகின்றனர். பெரும்பாலும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் அல்லது இந்திப்பாடல்கள் பாடப்படுகின்றன. ஒன்றிரண்டு தமிழ்ப் பாடல்கள் மட்டும் கேட்கலாம்.

சொற்பொழிவாற்றிய பண்டிதர் ஒருவர் வடமொழி என்பது தங்கப் பாத்திரம் போன்றது. அது வழிபாட்டிற்குரியது. அதனைப் பூசை அறையில் வைத்துப் போற்ற வேண்டும் என்றார். தமிழ்மொழி பித்தளைப் பாத்திரமென்றும் அதனை எங்கே வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் என்றும் பேசினார்.

உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதைந்து போன ஒரு மொழியை உயர்த்துவதற்காகத் தமிழன்னையைத் தூற்றலாமா?

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும்
முதலை யுண்ட பாலனை அழைத்ததும்
கன்னி தண்டமிழ்ச் சொலோ
மறுபுலச் சொற்களோ சாற்றீர்"

என அவரிடம் கேட்போம்.

"கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததாய் எண்ணவும் படுமோ"

என்ற உண்மையைப் பண்டிதர் மறந்து விட்டாரோ!

வடமொழிப் பாட்டு குயிலின் பாட்டு போல் இனிமையாக இருக்கின்றதாம். அது சிலருக்குப் பிடிக்கவில்லை என்றால் குயிலுக்குக் குறைவு ஒன்றும் வந்துவிடாது என்று மற்றொரு பண்டிதர் கூறுகின்றார். ஹா, ஹா என்று பாடுவது குயில்பாட்டு ஆகுமா?

'கீதமினிய குயிலே' என்று பாடுவது தமிழ்ப்பாட்டு

"ஆதிகுண மொன்று மிலான்
அந்தமிலான் வரக்கூவாய்"

என்று **மணிவாசகர்** பாடுகின்றார். திருவாசகத்தைக் கேட்ட கீழ்ப் பறவைச் சாதிகளும் மெய்ஞ்ஞான நாட்ட முறுகின்றன. திருவாசகத்தைக் கேட்டு நமது பண்டிதரின் மனம் உருகாதா?

யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல் இனிதாவது
எங்கும் காணோம்;
பாமரராய், விலங்குகளாய்,
உலகனைத்தும் இகழ்ச்சிசொலப்
பான்மை கெட்டு,

நாமமது தமிழரெனக்
கொண்டுஇங்கு வாழ்ந்திடுதல்
நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை
உலகமெலாம் பரவும்வகை
செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல் வள்ளுவர்போல்,
இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை, உண்மைவெறும்
புகழ்ச்சி யில்லை;

ஊமையராய்ச் செவிடர்களாய்க்
குருடர்களாய் வாழ்கின்றோம்
ஒருசொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம் தமிழ்முழக்கம்
செழிக்கச் செய்வீர்!

எனப் **பாரதியார்** கூறியதை நம் பண்டிதரின் காதில் விழும்படி பறை சாற்றுவோம்.

———

# மறைமலை அடிகள் பிறந்திலரேல்

[முருகையன், இலங்கை]

மறைமலை யடிகள் பிறந்திலரேல்
மணிமிடை பவளம் வளர்ந்திருக்கும்
அறிவிலர் கூட வடமொழியில்
ஐந்துசொல் தெரிந்த அவ்வளவில்
விறுவிறு என்று மந்திரங்கள்
மேடையில் ஏறி வெளுத்திருப்பார்
குறுகிய பார்வை தொடர்ந்திருக்கும்
குலநல யாவும் உடைந்திருக்கும்.

ஸம்மேளனங்கள், ஸதஸ் முதலாம்
தான தர்மம் நடந்திருக்கும்
அம்மாள் அம்பா ஆயிருப்பாள்
ஆஷ்டுக் குஷ்டி நாஷ்டினிலே
கும்மாளங்கள் போஷ்டிருக்கும்;
குஷ்டுப் படுவார் நற்றமிழர்
தம்மாலியன்ற ஸத்கர்மம்
ஸாதித் திருப்பார் ஸாஸ்திரிமார்.

ப்ரஹ்மக்ஞான ஸபாக்களிலே
ப்ராரத்வத்தின் தாத்பர்ய
ஸம்வாதங்கள் ஸம்பவிக்கும்
தமிழர் ஸர்வ ஸம்ஸ்க்ருதப்
பெம்மானுர்கள் ஆயிருப்பார்
பிச்சை கொடுத்தல் போல அவர்
தம்வாய்ச் சொல்லின் இடையில் இரு
தமிழை நுழைய விட்டிருப்பார்.

தொடக்க விழாக்கள் நடந்திருக்கா
தூய அங்கு ரார்ப்பணங்கள்
நடக்கும்; தலைமை தாங்குகிற
நல்ல வேலை இருக்காது
வடக்கர் மொழியின் வார்த்தைகளால்
வர்ணித்திருப்பார்; மஹாந் ஸ்ரீமாந்
அடக்கப் படானுர் என்பாரும்
அக்ராஸனம் தான் வஹித்திருப்பார்.

நெஞ்சை அள்ளும் நிகழ்ச்சிகளை
நிகழக்கூட விட்டிருக்கார்
மஞ்சட் கண்ணுற் பார்த்திருப்பார்
மனோ ரம்மியமாய் மனோஹரமாய்
ரஞ்சித் பூரண ரமணீய
ரஸிகார் ஹததமாம் ஸம்பவம் தான்
மிஞ்சி இருக்கும் த்ராவிடர்கள்
வேஷ்டி மஷ்டும் அணிந்திருப்பார்.

ப்ராண வாயு ஜலவாயு
ப்ரேமையுடனே ஸங்கமிக்க,
புராண கால பாஷையிலே
புது ஸங்கிருத்யம்—ஜலம் ஜனிக்கும்
வராஹம், மத்ஸ்யம், கூர்மம் எனும்
வரிசை அன்றி, இன் தமிழின்
விராவும் குளிர்மை உணராத
வெற்று மாக்கள் ஆயிருப்போம்.

மன்றில் நிகழும் சொற்பொழிவை
வளரா தொடுக்கி விட்டிருப்பார்
ஒன்றும் புரியாக் கிரந்தத்தில்
உபந்யாஸங்கள் நடந்திருக்கும்
கன்று குணிலாக் கனி உதிர்த்த
கண்ணன் என்று பாடாமல்
தின்று விழுங்கி உரப்பலுடன்
திமிறல் களைத்தல் நயந்திருப்போம்.

சோற்றை உண்ணேம்; ஸாதத்தை
ஸுத்தமாகப் புசித்திருப் போம்
ஊற்று நீரைக் குடிக்காமல்,
உவந்து தீர்த்த பானத்தை
ஏற்று ஸந்தோஷித்திருப்போம்
இவற்றுள் எதுவும் நிகழாமல்,
வேற்று மொழியை விலக்குகிற
மிதப்பு வாய்க்கப் பெற்றுள்ளோம்.

எங்கள் மொழியை, மதநெறியை
இழிவாய் மதித்தும், அன்னியத்துள்
முங்கி எழுந்து மூழ்குவதில்
மோகம் கொண்டும் இருந்தோமை

பொங்கி எழுங்கள் என வறிதே
போதிக் காமல் ஆராய்ச்சி
தன்கை யாலே வரைந்து, பல
தமிழ் நூல் தந்தான் மறைமலையான்.


துணிந்து கண்டு, மறைபொருள்கள்
சொல்ல வல்ல தொழில் உடையான்
அணிந்த நீறும் சிவஅன்பும்
அமைந்த தூயன் ; அறிவுடையான்
திணிந்த கருத்துப் பொதிந்த நறுஞ்
செஞ்சொல் வழங்கும் திருவாளன்
மணந்து கமழ்ந்து நெடுந்தொலைக்கும்
மலிந்து பரக்கும் புகழாளன்.

கலப்பால் தூய்மை தொலைந்து விடும்,
கலையின் சீர்மை கலைந்து விடும்
தொலைப்பே விரும்பும் மாற்றாரின்
சொந்த வேட்கை பலித்து விடும்
நிலைப்பால் உரத்த மாண்புடைய
நீண்ட பண்பா டொழிந்துவிடும்
அலுப்பேன் ? உணர்க, எழுகஎன
அறைந்தான் ; அவன்எம் மீட்பாளன்.

மீட்பன் பிறக்கா திருந்திருப்பின்,
வேற்று வயமாய் நாம் மயங்க
ஆட்பட் டழிந்து போயிருக்கும்,
அரிய குளிர்ந்த செய்ய தமிழ்
நாட்பட் டகன்று காலங்கள்
நகர்ந்து பல்லாண் டானாலும்
மாட்சி மிக்க அவன் சீர்த்தி
வாடா மலராம்—வாழ்க புகழ்.

# புலவர் குழந்தையின் பிரிவாற்றுமை

தமிழர் சிறப்புக் கூறும் தனித்தமிழ்க் காப்பியமான 'இராவண காவியத்'தை ஈன்றெடுத்த புலவர் குழந்தை அவர்கள் 25—9—1972 அன்று மறைவுற்றது அறிந்து பெரிதும் வருந்துகிறோம். கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் தமிழகத்தில் இராம இராவணக் கருத்துப் போராட்டம் வலுத்து விளங்கிய காலத்தில் இராவணனின் பெருமையை எடுத்துக்கூறி 'இராவணப் பெரியார்' 'Ravana the Great' என்ற நூல்களை மு. சி. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதினுர்கள் அதே துறையில் பின்னர் எழுந்த நூல் தான் 'இராவண காவியம்'. 2—6—1948 இல் அஃது அன்றைய அரசால் தடை செய்யப் பெற்று 17—5—71 இல் தமிழக அரசால் விடுதலை செய்யப் பெற்றது. கருத்து மாறுபாடு இருப்பினும் காப்பிய நயத்தில் சிறந்து விளங்கும் 'இராவண காவியத்'தை எழுதிய புலவர் குழந்தை அவர்கள் சிறந்த கவிஞர். இலக்கணப் பேரறிஞர்; வரலாற்று நூலாசிரியர்; சிறந்த ஆராய்ச்சியாளர்; குறள் உரையாசிரியர்.



முத்துச்சாமிக் கவுண்டருக்கும் சின்னம்மையாருக்கும் கொங்கு நாட்டுக் கோவை மாவட்டத்து ஓலவலசு என்னும் சிற்றூரில் 1-7-1906 இல் தோன்றியவர் புலவர் குழந்தை. திண்ணைப் பள்ளிகளில் பயின்றதைத் தவிர வேறு பள்ளி சென்றறியாதவர். பத்தாண்டுப் பருவத்திலேயே இயற்கையாகக் கவிபாடும் ஆற்றல் பெற்றவர். தாமே தமிழ் பயின்ற தமிழறிஞர். 1934 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகப் புலவர் பட்டம் பெற்றுச் சிறந்தார்.

அவர் 1924 முதல் 1962 முடிய 39 ஆண்டுகள் ஆசிரியத் தொண்டாற்றியுள்ளார். 1941 முதல் 1962 வரை பவானி கழக உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

அவர் அரசியலரங்கம், நெருஞ்சிப்பழம், காமஞ்சரி போன்ற கவிதை நூல்களையும் யாப்பதிகாரம், தொடையதிகாரம் போன்ற இலக்கண நூல்களையும் படைத்துள்ளார். திருக்குறள், தொல்காப்பியம் - பொருளதிகாரம் முதலிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். தொல்காப்பிய காலத் தமிழர், தமிழக வரலாறு, கொங்குநாடு போன்ற பதினைந்துக்கு மேற்பட்ட உரை நடை, ஆராய்ச்சி நூல்களை எழுதியுள்ளார்.


தந்தை பெரியாரின் தன்மதிப்பு (சுயமரியாதை) இயக்கத்தைச் சார்ந்து இறுதி வரை அவர்வழி நின்றவர். 1938; 1948 இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டார். வேளாளர் இன ஒற்றுமைக்காக 'வேளாளன்' என்ற இதழை நடத்தியவர்.

தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்பனவற்றையே மூங்காடியாகக் கொண்டு தமிழுக்கு, தமிழர்க்கு, தமிழ் மரபுக்கு ஒவ்வாதவற்றை ஒளிவு மறைவின்றிக் கண்டித்துப் புலவருள் இற்றைய நக்கீரர்போல் ஏறுநடை போட்டு வந்த பெருமகனார் மறைவுற்றது தமிழ் நாட்டிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

---

## புலவர் பு. செல்வராசனார் மறைவு

இற்றைக்கு முப்பது ஆண்டுகட்கு முன்னர், திராவிடர் இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட பெருமக்களில் ஒருவராக விளங்கியவரும் ''விடுதலை'', ''குடியரசு'', ''கதிரவன்'', ''மாலைமணி'' முதலிய ஏடுகளில் ஆசிரியராக இருந்து தமிழ் மொழிக்கும் தாய்த்திரு நாட்டிற்கும் தன்னலமற்ற தொண்டாற்றியவரும், டாக்டர் மா. இராசமாணிக்கனாரவர்களின் மைத்துனருமாகிய புலவர் பு. செல்வராசனார் அவர்கள் 1-10-72 பிற்பகல் இரண்டரை மணியளவில் புகழுடம்பு எய்தினார்கள்.



இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு முன்னணி வீரராகத் தொண்டாற்றிய புலவர் அவர்கள் அமரர் அண்ணா அவர்களுடன் இணைந்து ஆற்றிய அரும் பணிகள் எண்ணிறந்தவை. அந்நாளில் தந்தை பெரியார் அவர்களின் அன்பிற்கு உரியவரானவர்களுள் குறிப்பிடத் தக்க ஒருவர் புலவர் செல்வராசு அவர்கள்.

திராவிடர் இயக்கத்தில் பணியாற்றியபோது சீர்திருத்தக் கருத்துக்களைத் தம் எழுத்துக்களின் மூலம் தமிழகத்தில் பரப்பிய புலவர் அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் ஏராளமான பாட நூல்களை எழுதியும் தொகுத்தும் உதவினார்கள். எளிமையும் இனிமையும் கருத்தாழமும் இவரின் தனிச் சிறப்புக்கள்.

சிறந்த சீர்திருத்தவாதியாக, ஆசிரியராக, எழுத்தாளராக, பேச்சாளராக —இப்படிப் பல நிலைகளிலும் தமக்கென ஒரு பாணியை அமைத்துக்கொண்டு தொண்டாற்றிய புலவர் அவர்களின் மறைவால் வருந்தும் அவருடைய குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் நம் ஆறுதலைக் கூறி அமைதி காண்போம்.

---

# நூலகப் பேரறிஞர்
# டாக்டர் எஸ். ஆர். அரங்கநாதனின்
# பெரும்பிரிவு

இந்திய நூலகத்துறையின் விடிவெள்ளியாகத் திகழ்ந்த பேரறிஞர், தாமரைச் செல்வர், டாக்டர். எஸ். ஆர். அரங்கநாதன் அவர்கள், செப்டம்பர்த் திங்கள் 27 ஆம் நாள் இரவு பெங்களூரிலுள்ள ஒரு மருத்துவமனையில் மறைவுற்றார்கள். அனைத்துலகிலும் நூலகத் துறையில் சிறந்து விளங்கிய ஒரு சிலருள் குறிப்பிடத்தக்கவராக வாழ்ந்தவர் அவர். நூலகத் துறையைப் பொறுத்தமட்டில் இந்தியா என்றால் டாக்டர். அரங்கநாதன் என்று மேலைநாட்டினரால் மதிக்கப் பெற்றவர் அவர். அவர் தோன்றியிராவிடில் இந்தியா இத் துறையில் இன்று தலைநிமிர்ந்து நிற்க முடியாது.



இத்தனை பேராற்றலும் பெரும் புகழும் பெற்று விளங்கிய டாக்டர். அரங்கநாதன் அவர்களை ஈன்றெடுத்தது இத் தமிழ்நாடு என்பது தமிழ் நாட்டுக்குப் பெருமை தருவதாகும். ஞானத் தமிழ் வளர்த்த சம்பந்தப் பெருமான் தோன்றிய சீர்காழியில் 9 ஆகஸ்டு 1892 இல் இராமாமிர்த ஐயருக்கும் சீதாலட்சுமி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார். அங்குள்ள எஸ்.எம். இந்து உயர்நிலைப்பள்ளியில் பயின்று மெட்ரிகுலேசன் தேர்வில் தேறினார். சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் எம்.ஏ. (கணக்கு) படித்துத் தேறினார். ஆசிரியப் பணியை மேற்கொள்ள எல்.டி. பட்டமும் பெற்றார். 1917 முதல் 1924 வரை ஏழாண்டுகள் மங்களூர், கோவை அரசினர் கல்லூரிகளிலும், சென்னை மாநிலக் கல்லூரியிலும் பணியாற்றினார்.

1924இல் புதிதாக உருவாக்கப்பெற்ற சென்னைப் பல்கலைக் கழகத்தின் முதல் நூலகராகப் பொறுப்பேற்றார். அதே ஆண்டில் இலண்டனுக்குச் சென்று நூலகப் பயிற்சி பெற்றார். படிக்கும்பொழுதே இலண்டனிலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட நூலகங்களைப் பார்வையிட்டார். ஓராண்டுப் படிப்பை முடித்துக் கொண்டு இந்தியாவிற்குத் திரும்பு முன்னரே புதிய நூலகப் பகுப்பு முறையான 'கோலன் முறை'யைக் கண்டுபிடித்தார். அம் முறை இன்று இந்தியாவில் பெரும்பாலான நூல் நிலையங்களில் பின்பற்றப் பெறுகின்றது.

1928இல் கே. வி. கிருட்டிணசாமி ஐயருடன் சேர்ந்து 'சென்னை நூலகச் சங்கத்தை'த் தோற்றுவித்தார். அச்சங்கத்தின் வழி தமிழகமும் ஆந்திரமும் இணைந்த பரந்த சென்னை மாநிலத்தில் நூலக இயக்கத்தைப் பரப்பினார். நூலகத்துறையில் பல அரிய நூல்களைச் சங்கத்தின் வழி எழுதி வெளியிட்டார். பின்னர் 1933இல் 'இந்திய நூலகச்சங்கம்' தோன்றுதற்கும் அவரே முன்னின்றார்.

1944இல் கருத்து வேறுபாடு காரணமாகச் சென்னைப் பல்கலைக் கழக நூலகர் பொறுப்பிலிருந்து அவர் விலகினார். அதன்பின் வாரணாசி, தில்லி முதலிய பல்கலைக் கழகங்களில் நூலகத்துறைகளைத் தோற்று வித்துத் தலைமையேற்று நடத்தினார். 1955 இல் ஓய்வு பெற்றபின் நிலையான பணியேதும் ஏற்கவில்லை.

1962இல் நூலகத்துறையின் மேற் படிப்புக்கான 'நூலக ஆராய்ச்சி, பயிற்சி நிலையம்' ஒன்றைத் தொடங்கி இறுதிவரை அதன் மதிப்புறு பேராசிரியராக இருந்தார். பலமுறை மேனாடுகட்குச் சென்று பல நூலக மாநாடுகளில் கலந்துகொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தி யுள்ளார்.

நூலகத் துறையில் அறுபதுக்கு மேற்பட்ட நூல்களையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இவற்றைப் பட்டியல் செய்தே ஒரு பெரிய நூல் வெளிவந்துள்ளது.

அவர்தம் பேராற்றலைப் போற்றும் வகையில் 'இராவ்சாகிப்' 'தாமரைச் செல்வர்' (பத்மஸ்ரீ) போன்ற பட்டங்கள் அவருக்கு வழங்கப் பெற்றன. தில்லிப் பல்கலைக்கழகமும் அமெரிக்காவிலுள்ள பிட்ஸ்பர்க் பல்கலைக்கழகமும் டாக்டர் (டி. லிட்) பட்டங்கள் வழங்கியுள்ளன. இறுதியாக இந்திய அரசு நூலகத் துறையின் 'இந்திய தேசியப் பேராசிரியர்' என்ற பொறுப்பையும் அவருக்களித்தது.

அறிவுச் செல்வத்தைப் பிறருக்கு வாரிவழங்கிய டாக்டர். எஸ். ஆர். அரங்கநாதனார் தம் பொருட் செல்வத்தையும் வாரிவழங்கத் தயங்கவில்லை. ஓர் இலக்க ரூபாயைச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நூலகத் துறையைத் தொடங்குவதற்காக வழங்கினார். தம் துணைவியார் பெயரையும் இணைத்து 'சாரதா ரங்கநாதன் நூலக இயல் அறக்கட்டளை' யொன்றை நிறுவியுள்ளார். அதன்வழி ஆண்டுதோறும் நூலக இயல் பற்றி மேனாட்டறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெறுகின்றன.

பல மாநிலங்களுக்கு அவர் நூலகச் சட்டங்களை உருவாக்கிக் கொடுத்துள்ளார்.

இச் சைவசித்தாந்தக் கழகத்தோடும் டாக்டர் அரங்கநாதன் அவர்கட்குத் தொடர்புண்டு. சென்னை மறைமலையடிகள் நூல்நிலையம் உருவாகுதற்கு அவர் பல நல்ல திட்டங்களை வகுத்துக் கொடுத்தார். கழகத்தின்முதல் 1008 நூல்களுக்கும் டாக்டர் அரங்கநாதன் அவர்களும் மறைமலையடிகள் நூலக நாயகர் திரு. இரா. முத்துக்குமாரசாமியும் சேர்ந்து 'பாராட்டுவிழா நூல்பட்டி' யொன்றைத் தொகுத்தனர். கழகத்தின் 1009 வது வெளியீடாக அது வெளிவந்தது.

தம் உயிர் பிரியும் வரை நூலகத் துறை வளர்ச்சிக்காகவே வாழ்ந்து தொண்டாற்றி மறைந்த அப்பேரறிஞரின் ஆன்மா இறையடியில் இன்புற வணங்கி அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் துணைவியாருக்கும் அவர்தம் ஓரே மகனுக்கும் நம் ஆழ்ந்த இரங்கலைக் கூறி அமைகிறோம்.

———

# செய்திகளும் குறிப்புக்களும்

## செத்த வடமொழிக்கு ஒரு பல்கலைக் கழகமா?

சமக்கிருதத்திற்கென ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதென ஆந்திரப் பிரதேச அரசினர் செய்திருந்த முடிவை எதிர்த்து, ஐதராபாத்து முற்போக்கு எழுத்தாளர் கழகம் 3-10-72 இல் ஒரு மாநாடு நடத்திற்று.

நாட்டில் பஞ்சம் பரவிவரும் வேளையில் அதனைச் சமாளிக்கப் போதிய பணம் இல்லை என்ற நிலையில் செத்த வடமொழியாம் சமக்கிருதத்திற்கு ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதை அம்மாநாடு வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

## சோழர் கால நாணயங்கள்

சோழர் காலத்தவை என்று கருதப்படும் 700 செப்பு நாணயங்கள் அரியலூர் அருகே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அரியலூரை யடுத்த கோவிந்தப் புத்தூர் என்னும் சிற்றூரில் தொழிலாளர்கள் ஒரு கால்வாய் வெட்டிக் கொண்டிருந்தபோது, மண்ணுக் கடியிலிருந்து ஒரு பானை கண்டுபிடிக்கப்பட்டது. அதில் 700 செப்பு நாணயங்கள் இருந்தன. இவை அரசாங்க வருவாய்த்துறை அலுவலர் (Revenue officer) வசம் ஒப்படைக்கப்பட்டன.

## அரியலூர் மணிவாசக மன்ற வெள்ளிவிழா

19-8-1972 முதல் 23-8-1972 முடிய 5 நாட்கள் அரியலூர் திரு. கோதண்டராமப் பெருமாள் கோயில் தசாவதார மண்டபத்தில் அரியலூர் மணிவாசக மன்றத்தின் வெள்ளிவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு மதுரை யாதீனம் அருட்டிரு சோமசுந்தர திருஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தலைமை தாங்கினார்கள். அவர்கள் வெள்ளிவிழா மலரினைத் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களிடம் வழங்கினார்கள். கருத்தரங்கில் பல பொருள் குறித்து அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். அரியலூர் அஞ்சல் நிலையத் தலைவர் திரு. ஆ. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் ஆர்வத்தோடு முன்னின்று பணியாற்றியதோடு வரவேற்புரையும் நன்றியுரையும் வழங்கி விழாச் சிறப்புறச் செய்தனர். வாழ்க மணிவாசகர் மன்றப் பணிகள்.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2/140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : வ. சுப்பையா.